Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி -19 03-07-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 135



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12150)

## குருநகர் கரையோரத்தில் கடற்படையினரால்

# மின்பாய்ச்சப்பட்ட முட்கம்பியில் சிக்கிய

# மீனவ இளைஞர் பரிதாப மரணம்!

## மக்கள்-படையினர் இடையே முறுகல்

(யாழ்ப்பாணம்)

**யாழ். குருநகர்ப் பகுதியில் சிறிலங்கா கடற்படையின் மின் பாய்ச்சப்பட்ட முட்கம்பியில் சிக்கி நேற்று இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதையடுத்து அப்பகுதி மக்களுக்கும், படையினருக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது.**

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது;

குருநகர் இறங்குதுறைப் பகுதியில் சிறிலங்காக் கடற்படையின் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் ஆக்கிரமித்து நிற்கின்றனர்.

இப்பகுதி ஊடாகவே குருநகர்ப் பகுதி மீனவர்கள் மீன்பிடித்தலுக்குச் செல்லவேண்டிய நிலை தொடர்ந்து வருகின்றது.

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் வழமைபோல் மீன் பிடித்தலில் ஈடுபடுவதற்காகச் சென்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ வைப்பகத்தின் 12 ஆவது கிளை நாளை மறுதினம் பரந்தனில் திறப்பு

(நமது நிருபர்)

தமிழீழ வைப்பகம் தனது கிளையினை நாளை மறுதினம் பரந்தனில் ஆரம்பிக்கவுள்ளது என தமிழீழ வைப்பக நடுவப்பணியக ஆளுகைப்பகுதி மேலாளர் அறிவித்துள்ளார். தமிழீழ வைப்பகத்தின் 12 ஆவது கிளையாக இக்கிளை ஆரம்பிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் நிபந்தனைகள் குறித்து ஆராய பாதுகாப்புச் சபையை சந்திரிகா கூட்டுகிறார்

கிழக்கில் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களின் பாதுகாப்பான போக்குவரத்துக் குறித்து ஆராய சனாதிபதி சந்திரிகா சிறிலங்காவின் தேசிய பாதுகாப்புக் குழுவைக் கூட்டவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுடனான சந்திப்புக் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் சிறிலங்கா அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிடம் விளக்கியதையடுத்து நேற்று முன்தினமிரவு ஜயந்த தனபால சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து புலிகளின் காலக்கெடு குறித்து விளக்கமளித்துள்ளார். இதனையடுத்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்புக் குழுவைக் கூட்ட முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கடற்றொழிலாளர் பலியானதைக் கண்டித்து படையினருக்கு எதிராக நாளை போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

குருநகர் இறங்குதுறைப் பகுதியில் நேற்றுக் காலை மீனவர் ஒருவர் கடற்படையினரின் மின்சார வேலியில் சிக்குண்டு உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து குருநகர் கடற்றொழில் அமைப்புக்கள் படைத் தரப்பிற்கெதிரான உண்ணாவிரதப் போராட்டமொன்றை நாளை நடாத்தவுள்ளன.

கரையோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முட்கம்பி வேலிகள் அகற்றப்பட வேண்டுமெனவும், கரையோரப் பகுதிகளிலுள்ள இராணுவ, கடற்படை நிலைகள் அகற்றப்பட வேண்டுமெனவும், பாஸ் நடைமுறைகளை நீக்கி சுதந்திரமான மீன்பிடித் தொழிலுக்கு அனுமதியளிக்க வேண்டுமென்றும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா பொலிஸ் கான்ஸ்டபிள் வாழைச்சேனையில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் நேற்று நண்பகல் பொலிஸ் கான்ஸ்டபிள் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளார். கல்குடா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சமிந்த ரோகண கிறிசாந்த (வயது-31) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டார். பொலிஸ் நிலையத்திலிருந்து தனிப் பட்ட தேவை காரணமாக வெளியே சென்ற போது கல்குடா சந்திக்கு அருகில் அவரை எதிர்கொண்ட மூன்று இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.(32)

## மூன்றாவது பதவிப் பிரமாண ஆவணங்களை சனாதிபதியிடம் கோர தேர்தல் ஆணையாளர் முடிவு!

(கொழும்பு)

மூன்றாவது தடவையாக சனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட வர்த்தமானி அறிவிப்பையும் அது சம்பந்தமான ஆவணங்களையும் சனாதிபதியிடம் கேட்பதற்கு தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

இரண்டாவது தடவையாக சனாதிபதியாக பதவியேற்று ஒரு வருடத்தின் பின் அதாவது 2000ஆம் ஆண்டு மீண்டும் ஒரு தடவை இரகசியமாக நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருந்தார்.

அவர் கூறியதை அடிப்படையாக வைத்து அடுத்த சில தினங்களில் அது சம்பந்தமான வர்த்தமானி


(12 ஆம் பக்கம் பார்க்க)

## கெடுபிடி அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

நாவிதன்வெளி, கல்முனைப் பிரதேசங்களில் அண்மைக் காலமாக விசேட அதிரடிப்படையினரின் அடாவடித்தனங்களும், கெடுபிடிகளும் அதிகரித்து வருவதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## உலகவங்கிப் பிரதிநிதி தமிழ்ச்செல்வன் சந்திப்பு

(கிளிநொச்சி)

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை உலக வங்கியின் இலங்கைக்கான தலைவரும், ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதியும் நேற்று சந்தித்துப் பேசியுள்ளனர்.

கிளிநொச்சியிலுள்ள அரசியல் துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் விடுதலைப்புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜெய் மகேஸ்வரன், திட்டமிடல் அபிவிருத்திச் செயலக அலுவலர்கள், சமாதானச் செயலகப் பணிப்பாளர் எஸ். புலித்தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இன்னுமொரு சந்திப்பில் நோர்வே பதில் தூதுவர், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

## வரிவிளம்பரம்

### K.S.K கணினி நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் 11. 07. 2005

புதுக்குடியிருப்பில் இயங்கும் எமது கணினி நிலையத்தில் கல்வி கற்ற,கற்று வருகின்ற அனைத்து மாணவர்களுக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் 09.07.2005 சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற விருப்பதால் அனைத்து மாணவர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
நிர்வாகம் (6320)

### SPOKEN ENGLISH

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு அடிப்படை இலக்கணத்துடன் பயிற்சி ஆரம்பம்:04.07.2005 மாலை 5.மணி இடம்: அன்னை வேளாங்கன்னி ஆலயம் முன்பாக உதயநகர் கிழக்கு. ஆசிரியர் க.யோகன் (BBA&NDE) (6288)

### மணமகள் தேவை

இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் 1973 இல் பிறந்த விசாக நட்சத்திரம் 02ஆம்பாதம் உள்ள விவகாரத்துப் பெற்ற மணமகனுக்கு தருந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். முகவரி:- க. திருநாவுக்கரசு (சோதிடர்) துர்க்காவீதி, 04ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.(சி.12255)

## தூய அந்தோனியார் ஆலயத்திறப்பு விழா

பள்ளிக்குடா தூய அந்தோனியார் ஆலயத்திறப்பு விழா 03.07.2005 இன்று மாலை 5 மணிக்கு கிறிஸ்தவ விவகார அமைச்சின் நிதியுதவியுடன் புதிதாக கட்டப்பட்ட ஆலயம் கிளி, முல்லை மறைக்கோட்ட குரு முதல்வர் அருட்பணியாளர் தே[illegible] சகாயம் அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டு நவநாள் வழிபாடுகள் இடம் பெற்று 12.07.2005அன்று ஆலயப் பெருவிழா காலை 7 மணியளவில் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் தலைமையில் திருவிழாத் திருப்பலி இடம் பெற உள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*பங்குத்தந்தையும்,பள்ளிக்குடா திருச்சபையினரும்.* (சி.12273)

## பணிநிலை வேண்டுகை

*ஆரம்பிக்கப்படவுள்ள கிளி. மாவட்ட தமிழீழ நுண்கலைக் கல்லூரி, மல்லாவி நுண்கலைக்கல்லூரி ஆகியவற்றிற்கான கீழ் வரும் பணிநிலைக்கு தகுதியானவர்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.*

பணிநிலை:- அதிபர்(மல்லாவி,கிளிநொச்சி)

தகுதிநிலை:- ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர் அல்லது ஓய்வு பெற்ற கலைத்துறை ஆசிரியர்கள் விரும்பப்படுகிறார்கள்.
- சேவை மனப்பாண்மை உள்ள வராக இருத்தல் வேண்டும்.
- மாவீரர் போராளி குடும்பங்களுக்கு முன்னுரிமை வழுங்கப்படும்.
- திட்டங்கள் தயாரிக்கும் முன் அனுபவம் விரும்பத்தக்கது.

பணிநிலை:- கணக்காளர் (மல்லாவி)

தகுதிநிலை:- A/L கணக்கியலில் நல்ல பெறுபேறு உள்ளவராகவும்,கலைத்துறை சார்ந்த ஏதேனும் கல்வித்தகுதி உள்ளவராகவும் இருத்தல் சிறப்பானது.

பணிநிலை:- நிர்வாக உத்தியோகத்தர்( மல்லாவி)

தகுதிநிலை:- A/L நல்ல பெறுபேறு உள்ளவராகவும் கலைத் துறையில் நல்ல ஈடுபாடுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

பணிநிலை:- பாதுகாவலர் (மல்லாவி)

தகுதிநிலை:- இயக்க நிறுவனங்களில் பணியாளராக பணி செய்திருப்பின் விரும்பத்தக்கது.
- நிரந்தரமாக நின்று பணியாற்றுபவராக இருத்தல் வேண்டும்
- மாவீரர், போராளி குடும்பங்களுக்கு முன்னுரிமை வழுங்கப்படும்.

குறிப்பு:- ஊதியம் நேரில் பேசித்தீர்மாணிக்கப்படும்.

தனிப்பட்ட விண்ணப்பங்கள் இல்லை. தகைமைச் சான்றிதழ்களுடன் கீழ்க்காணும் முகரிக்கு 8 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.


முகவரி:- இல-16
பரவிப்பாஞ்சான்
(தமிழீழ மாணவர் அமைப்பு அலுவலக முன்பாக)
கிளிநொச்சி.

பொறுப்பாளர்,
தமிழீழ நுண்கலைப் பிரிவு,
அரசியல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம். (சி-12303)

## வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாள ருக்கு மேலும் ஒரு தொகுதி உபகரணங்கள் வழங்கல்

கியுமெடிக்கா நிறுவனத்தினால் நேற்று வடமராட்சி கிழக்கில் ஒருதொகுதி மீன்பிடிப் படகுகள் கடற்றொழிலாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



படங்கள்:-பிரதீபன்

நேற்று காலை 10 மணியளவில் வடமராட்சி கிழக்கு கடற்றொழில[illegible]சங்கங்களின் சமாசத்தில் வைத்து சுனாமியின் போது உயிர் இழப்புக்கள் ஏற்பட்ட குடும்பங்களுக்கு படகுகள்,வெளியிணைப்பு [illegible]ந்திரங்கள், வலைகள் என்பன வழங்கப்பட்டுள்ள[illegible]

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 10 [illegible]றொழிலாளர் சங்கங்களினூடாக 82 படகுத் தொகுதி கள் இவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (தீ)

## புது.பொன்னம்பலம் மருத்துவமனையில் அமெ.நிபுணர்கள் சத்திரசிகிச்சை

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருந்திருக்கும் சிறுநீர் வழி சத்திரசிகிச்சை, என்பு, மூட்டு சத்திரசிகிச்சை நிபுணர்களால் விசேட சத்திரசிகிச்சைகள் எதிர்வரும் திங்கள் முதல் வியாழன் வரை காலை 8.00 மணி முதல் மதியம் 12.00 மணிவரை நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட நோயாளர்கள் முக்கியமாக சிறுநீர் கழிப்பதில் சிரமங்கள் உள்ள வயோதிபர்கள், சிறுநீர் கழிக்கும்போது எரிவு, கேணியா போன்ற பிரச்சினை உள்ளவர்களிற்கும், முறிவு, மூட்டுக்களில் நோ, மூட்டு விலகல் போன்ற என்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை உள்ளவர்களுக்கும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன் தேவைப்படின் சத்திரசிகிச்சைகளும் மேற்கொள்ளப்படும்.

மக்கள் நலன்கருதி சத்திரசிகிச்சைகள் இலவசமாக நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் வெளிநோயாளர் பகுதியில் தொடர்பு கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## பாம்பு தீண்டி இளம் பெண் மரணம்

(அலுவலக செய்தியாளர்)

உறக்கத்தில் இருந்த வேளை பாம்பு தீண்டியதன் காரணமாக இளம்பெண் ஒருவர் மரணமானார்.

மேற்படி சம்பவம் கோயில் குஞ்சுக் குளம் பாலமோட்டை கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.

நேற்று நள்ளிரவு பாம்புக் கடிக்கிலக்கான மேற்படி இளம் பெண் மல்லாவி வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டு மேலதிகசிகிச்சையின் பொருட்டு மல்லாவி நோயாளர் காவுவண்டியில் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரும் வழியில்மரணம் சம்பவித்த தாக தெரியவந்துள்ளது. குஞ்சுக் குளம் பாலமோட்டையைச் சேர்ந்த ம.செல்வராணி (வயது-26) என்ற இளம் பெண்ணே பாம்புக்கடிக் குள்ளாகி மரண மாணவராவார். (சோ)

## உழவர்களின் நலன் கருதி உரங்களின் விலை தீர்மானம்

உழவர் நலன் கருதி உரங்களின் ஆகக்கூடுதல் விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது • இவ்விலையை விடக்கூடுதலான விலையில் உரங்களை விற்க வேண்டாமென நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி அறிவித்துள்ளது.

நாளை முதல் இவ்விலைக் கட்டுப்பாடு அமுலுக்கு வருகின்றது.

| பசளையின் பெயர் | உற்பத்தி நிறுவனத்தின் பெயர் | வன்னி விற்பனை விலை | யாழ்.விற்பனை விலை |
|---|---|---|---|
| யூரியா (50கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 651.00 | 672.00 |
| | சீ.ஐ.சீ | 656.00 | 677.00 |
| | இலங்கை உரம் | 630.00 | 651.00 |
| | ஹேலிஸ் | 646.00 | 667.00 |
| | பவர் | 656.00 | 677.00 |
| அமோனியா (50கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1,391.00 | 1,412.00 |
| | சீ.ஐ.சீ | 1,486.00 | 1,507.00 |
| | இலங்கை உரம் | 1,260.00 | 1,281.00 |
| | ஹேலிஸ் | 1,313.00 | 1,334.00 |
| | பவர் | 1,486.00 | 1,507.00 |
| வி 1 (50கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1,470.00 | 1,491.00 |
| | சீ.ஐ.சீ | 1,505.00 | 1,527.00 |
| | இலங்கை உரம் | 1,709.00 | 1,731.00 |
| | ஹேலிஸ் | 1,491.00 | 1,512.00 |
| | பவர் | 1,506.00 | 1,526.00 |
| ரீ.எஸ்.பி (50கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1,733.00 | 1,754.00 |
| | சீ.ஐ.சீ | 1,851.00 | 1,872.00 |
| | இலங்கை உரம் | 1,850.00 | 1,871.00 |
| | ஹேலிஸ் | 1,670.00 | 1,691.00 |
| | பவர் | 1,746.00 | 1,767.00 |
| ரீ.டீ.எம் (50கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1,129.00 | 1,150.00 |
| | சீ.ஐ.சீ | 1,268.00 | 1,289.00 |
| | இலங்கை உரம் | 1,162.00 | 1,185.00 |
| | ஹேலிஸ் | 1,155.00 | 1,176.00 |
| | பவர் | 1,284.00 | 1,305.00 |
| எம்.ஒ.பி (50கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1,785.00 | 1,806.00 |
| | சீ.ஐ.சீ | 1,943.00 | 1,964.00 |
| | இலங்கை உரம் | 1,796.00 | 1,817.00 |
| | ஹேலிஸ் | 1,670.00 | 1,691.00 |
| | பவர் | 1,942.00 | 1,964.00 |



பாக்தாத்திலுள்ள ஈராக்கிய பிரதமர் இப்ராகிம் அல் ஜபாரின் அலுவலகத்தின் மீது நேற்று முன்தினம் தற்கொலைத் தாக்குதல் நடைபெற்றதை அவதானிக்கும் ஈராக்கிய இராணுவத்தினரும் பாதுகாப்பு அலுவலர்களும்.

# கடல் நீர் அமிலமாக மாறும் ஆபத்து

# இங்கிலாந்து நிபுணர்கள் எச்சரிக்கை

(லண்டன்)

**காபனீரொட்சைட் அளவு அதிகரித்து வருவதை கட்டுப்படுத்தா விட்டால் 2100ஆம் ஆண்டுக்குள் கடல் நீர் மிக மோசமான அளவுக்கு அமிலமாக மாறிவிடும் என இங்கிலாந்து ஆராய்ச்சி நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ளகார்னீஜ் சுற்றுச் சூழல் ஆராய்ச்சி மையநிபுணர் கென்கால்டீரா மற்றும் இங்கிலாந்து நிபுணர்கள்கூட்டாக கடல் வளம் குறித்து ஆய்வு நடத்தினார்கள். இந்த ஆய்வுக்குப் பிறகு அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் கடலும், கடல் தாவரங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால் கடல் நீரை மாசுபடுத்தும் வகையில் மனிதனின் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன. இதனால் கரியமில வாயு அதிகமாக உற்பத்தியாகிறது.

கடல் நீர் கொஞ்சம் கொஞ்சமாக அமிலத்தன்மை உள்ளதாக மாறிவிடுகிறது. காபனீரொட்சைட் அளவு அதிகரித்து வருவதை கட்டுப்படுத்தாவிட்டால் 2100ஆம் ஆண்டுக்குள் கடல் நீர் மிக மோசமான அளவுக்கு அமிலமாக மாறி விடும்.

இதனால் கடல் தாவரங்களும்,கடல் வாழ் உயிரினங்களும்அழிந்து விடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வெப்பம் அதிகரித்து வருவதை கடல் நீர் ஓரளவு தணித்து வருகிறது. கடல் நீர் அமிலமாகமாறுவதால் வெப்பம் அதிகரிப்பதையும் தடுக்க முடியாமல் போய் விடும் உலகம் முழுவதும் உருவாகும் மொத்தக் கழிவுகளில் மூன்றில் ஒரு பகுதி கடலில்தான் கலக்கின்றன இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# நிர்வாணப் படங்கள் வைத்திருந்த இந்திய மருத்துவருக்கு 12 மாத சிறை

(லண்டன்)

ஆயிரக்கணக்கான சிறுமிகளை நிர்வாணமாகப் படம் எடுத்து வைத்திருந்த இந்திய மருத்துவருக்கு பிரிட்டனில் ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

லண்டனில் உள்ள விக்டோரியா மருத்துவமனையில் பணிபுரிந்தவர் மருத்துவர் பிஜூரமா மோகனா நாயர்முகன் (வயது38) இரண்டு குழந்தைகளுக்கு தந்தையான இவர் கடந்த ஆண்டு இங்கிலாந்து முழுவதும் சிறுமிகளை வைத்து யாராவது நிர்வாண மற்றும் ஆபாசப்படங்கள் எடுத்திருக்கின்றனரா என்று பொலிசார் தேடுதல் வேட்டை நடத்தினர். பிஜூ ரமா வீட்டில் நடந்த சோதனையில் மூவாயிரம் சிறுமிகளின் நிர்வாணப் படங்கள் மற்றும் ஆபாசப்படங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன.

பொலிஸ் பறிமுதல் செய்தவற்றில் 1422 போட்டோக்களும், 123 சிறு படங்களும், 1310 கணினிசிப் பைல்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் முழுவதும் 16 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் படங்கள் இருந்தன. இதையடுத்து மருத்துவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

கடந்த ஓராண்டாக நடந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில், மருத்துவர் பிஜூ மோகனுக்கு 12 மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனைக் காலம் முடிந்ததும் அவர் சொந்த நாட்டுக்கு அனுப்பப்படுவார்.

# தற்கொலைப் படையாளி துருக்கியில் சுட்டுக்கொலை

துருக்கியில் நீதித்துறை அமைச்சரகத்துக்குள்புகுந்த தற்கொலைத் தீவிரவாதி ஒருவர் வெடி குண்டுகளை வெடிக்கச் செய்வதற்கு முன்பு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். பிரதமர் தயீப் எர்டோகன் அலுவலகம் அருகே உள்ள நீதித்துறை அமைச்சர் செமில் சிசெக் அலுவலகத்துக்குள்ளேயே 25 வயது மதிக்கத் தக்க ஒருவர் நுழைந்தார். அவர் வெடிமருந்தை வெடிக்கச் செய்ய முயன்றார். ஆனால் அது வெடிக்கவில்லை உடனே அவர் தப்பியோடி தெருவுக்கு வந்தார். பொலிசார் அவரைச் சுட்டுக்கொன்றனர்.

# பட்டாசுத் தொழிற்சாலையில் வெடிவிபத்து மூன்று பேர் பலி; ஒருவர் படுகாயம்

போர்த்துக்கல் நாட்டில் சாவோ பெட்ரோதோ சுல் கிராமத்தில் உள்ள ஒரு பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட திடீர் வெடி விபத்தில் மூன்று பேர் பலியானதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதனால் பட்டாசுத் தொழிச்சாலையில் இருந்த இரண்டு அறைகள் சேதமடைந்தன. தீ அணைக்கும் படையினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர். இந்த விபத்துக்கான காரணம் தெரியவில்லை.



கடந்த வெள்ளியன்று பாக்தாத் பள்ளிவாசலில் தொழுகை முடித்துவரும் போது துப்பாக்கி தாரியினால் சுடப்பட்டு இறந்த அயதுல்லா அலிஅவ் சிஸ்ரானியின் உதவியாளரான கமல் எஸ் அல் குராய்பியின் உடலையும் அவரது உருவப்படத்தையும் ஆதரவாளர்கள் ஏந்திச் செல்கின்றனர்.

# ரஷ்யாவில் குண்டு வெடிப்பு பத்து இராணுவத்தினர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவில் தகெஸ்தான் மாநிலத் தலைநகரான மக்கச் சகலாவில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் அங்குகுவிந்திருந்த இராணுவத் தினர் பத்து பேர் பலியானார்கள். 20 பேர் காயமடைந்தனர்.



அண்மையில் ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளால் அமெரிக்க உலங்கு வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்ட பகுதியில் தேடுதல் நடத்தும் அதே ரக சீனுக் உலங்கு வானூர்தி.


# 16 இராணுவ உடல்கள் மீட்பு

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட அமெரிக்க இராணுவத்தினர் 16 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் மேலும் நான்கு பேரைக் காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானில் குனார் மாகாணப் பகுதிகளில் தலிபான் தீவிரவாதிகள் மீது அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தி வருகின்றது. இதைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க் கிழமை அமெரிக்க இராணுவத்தினர் சென்ற இராணுவ உலங்குவானூர்தியைத் தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தினர். உலங்கு வானூர்தியில் 20 இராணுவத்தினர் இருந்தனர். இவர்களில் 16 பேரின் உடல்களை அமெரிக்க இராணுவம் மீட்டுள்ளது. ஏனைய நான்கு பேரைக் காணவில்லை. அவர்கள் தலிபான் தீவிரவாதிகளிடம் சிக்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

# தேர்தலின்போது தொலைபேசியில் பேசியது உண்மையே நாட்டுமக்களிடம் மன்னிப்புக் கேட்டார் அரோயா

பிலிப்பைன்ஸ் சனாதிபதி குளோரியா அரோயா தேர்தலில் ஏற்பட்ட முறைகேட்டுக்கு நாட்டு மக்களிடம் மன்னிப்புக்கேட்டுக் கொண்டார்.



பிலிப்பைன்சில் இப்போது சனாதிபதியாக இருப்பவர் குளோரியா அரோயா, கடந்த ஆண்டு அங்கு நடந்த அதிபர் தேர்தலின் போது பெண் அதிபர் குளோரியா தில்லு முல்லு செய்ததாக எதிர்க் கட்சிகள் புகார் கூறினர்.

வாக்கு எண்ணிக்கையின் போது தலைமைத் தேர்தல் அதிகாரியுடன் பெண் அதிபர்தொலைபேசியில் பேசியதாகவும், தனக்கு சாதகமாக நடந்து கொள்ளும்படி பெண் அதிபர் மிரட்டியதாகவும் புகார் கூறப்பட்டது.

இந்த நிலையில் அதிபரின் குடும்பத்தினருக்கு சூதாட்டக் கும்பலிடையே தொடர்பு இருப்பதாகவும், சூதாட்டக் கும்பலிடம் இருந்து அதிபர் குடும்பத்தினர் பணம் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து அதிபருக்கு எதிராக போராட்டம் வலுத்து வருகிறது.

தனக்கு நெருக்கடி முற்றியதைத் தொடர்ந்து அதிபர் குளோரியா நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்டிருக்கிறார். தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு அவர் உரை நிகழ்த்தினார். அப்போது அவர் தேர்தல் அதிகாரியுடன் நான் தொலைபேசியில் பேசியது உண்மை. வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வத்தில்தான் அவருடன் நான் தொலைபேசியில் பேசினேன்.

இது தவறு தான். இந்தத் தவறுக்கு வருந்துகிறேன். இதற்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். ஆனால் எனக்குச் சாதகமாக தேர்தல் அதிகாரி எதையும் செய்து விடவில்லை என்று கூறினார்.

முன்பு அமெரிக்க முன்னாள் அதிபர் கிளிங்டன், மோனிகா லிவின்ஸ்கி பாலியல் விவகாரத்தில் நாட்டு மக்களிடமும், தனது குடும்பத்தினரிடமும் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டார். இதனால் இந்த விவகாரம் அப்படியே தணிந்து விட்டமை குறிப்பிடத்தக்கது.

# பூமி அதிர்ச்சி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தஜிகிஸ்தான் எல்லையில் நேற்று பூகம்பம் ஏற்பட்டது. காலை 9.18 மணிக்கு ஏற்பட்ட இப்பூமி அதிர்ச்சி ரிக்டர் அளவில் 5.6 ஆக பதிவானது. இதனால் சேதம் எதுவும் ஏற்டவில்லை.

# அமெரிக்க விண்கலம் ஒன்று 13ஆம் திகதி விண்ணில் செலுத்தப்படுகிறது

அமெரிக்கா இரண்டு ஆண்டு இடைவெளிக்குப் பின் முதல் முறையாக விண் கலத்தை வரும் 13ஆம் திகதி விண்ணில் செலுத்தவிருக்கிறது.

விண்ணில் நிலை நிறுத்தப்பட்டுள்ள சர்வதேச ஆராய்ச்சி நிலையத்துக்கு விண்வெளி வீரர்களையும் அவர்களுக்குத் தேவையான பொருட்களையும் அமெரிக்காவும் ரஷ்யாவும் அனுப்பி வருகின்றன.

2003ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குப் பின் வரும் 13ஆம் திகதிதான் முதன் முதலாக விண்கலத்தை அமெரிக்கா செலுத்தவிருக்கிறது.

கொலம்பியா விண்கலத்தில் ஏற்பட்ட தவறுகளைக் களைவதற்கு அமெரிக்காவுக்கு இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது பறக்கவிடப்பட்டிருக்கும் டிஸ்கவரி விண்கலம், கடந்த மே மாதமே விண்ணில் செலுத்தப்படுவதாக இருந்தது.

# ஈரானின் புதிய சனாதிபதி கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டவர்

ஈரானின் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்மூத் அகமது நெஜாத் கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டவர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

1979- ஆம் ஆண்டு அமெரிக்க தூதரகத்துக்குள் சில ஈரானியர்கள் புகுந்து அமெரிக்கர்களை கடத்தினர். அவர்களைப் பணயக்கைதிகளாக அடைத்து வைத்திருந்தனர். இந்தச் சம்பவத்தில் சனாதிபதி மக்மூத் அகமது நெஜாத் சம்பந்தப்பட்டிருந்தார் என்று முன்னாள் பணயக் கைதிகளான அமெரிக்கர்கள் கூறியுள்ளனர். இதை ஈரான் மறுத்துள்ளது.

இந்த நிலையில் அமெரிக்க சனாதிபதி புஷ் கூறுகையில், இந்தக் கடத்தலில் அகமது நெஜாத் சம்பந்தப்பட்டிருந்தாரா என்பது தெரியவில்லை. அப்போது எடுக்கப்பட்ட போட்டோக்களை அதிகாரிகள் அலசி ஆராய்ந்து வருகிறார்கள். அவர் கடத்தலில் பங்கு கொண்டாரா என்பது குறித்து ஈரான் அரசு பதில் கூறவேண்டும் என்றார்.

இதற்கிடையில் அமெரிக்க கடற்படையில் தலைவராக பணியாற்றி ஓய்வு பெற்ற டொனால்ட் ஷரேர் கூறுகையில், எங்களை சிறைப்பிடித்த ஈரானியர்களில் அகமது நெஜாத்தும் ஒருவர் என்று குறிப்பிட்டார்.



நேற்று முன்தினத்துடன் ஓய்வுபெறும் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் முதலாவது பெண் உறுப்பினரான சந்திரா டே ஒகொனார் நிதி.

# திருமலை புத்தர்சிலை விவகாரத்தைக் கண்டித்து

# 'யுனஸ்கோ' தலைமையலுவலகம் முன் போராட்டம்

## -பெருமளவு மக்கள் பங்கேற்பு

(பரிஸ்)

**பிரான்ஸ் தமிழர் மனித உரிமை மையத்தினரால் பரிசிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான கல்வி, கலை, கலாச்சாரம், விஞ்ஞானம் ஆகியவற்றின் தலைமைக் காரியாலயமான யுனஸ்கோ (UNESCO) முன்பாக அமைதிப் போராட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.**

திருகோணமலையில் சட்டவிரோதமாக - அரசியல் நோக்குடன் நிறுவப்பட்ட திடீர் புத்தர் சிலையைக் கண்டித்தும், சர்வதேச சமுதாயத்திடம் இந்தப் புத்தர் சிலையை உடன் அகற்றுமாறு கோரியும் இந்த அமைதிப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஏராளமான தமிழீழ மக்களும், அத்துடன் சில தோழமை அமைப்புகளின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

அமைதிப் போராட்டம் பரிஸ் ஏழாவது மாவட்டத்தில் "யுனஸ்கோ தலைமைக் காரியாலயத்திற்கு முன்பாகவுள்ள பொன்ரினே சதுக்கத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகியது.

போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் அரசும், அதன் ஊதுகுழலான சிறிலங்காவின் நீதித்துறையும் தமிழ் மக்கள் மீது பாரபட்சமாக நடந்து கொள்வதைக் கண்டித்து வாசக அட்டைகளைத் தாங்கியவண்ணம் நின்றனர்.

அங்கு காணப்பட்ட சில வாசக அட்டைகள், யுனஸ்கோவே திருகோணமலையில் புத்தர் சிலை விவகாரத்தில் உடன் தலையீடு செய்து சிலையை அகற்று" நாங்கள் புத்தருக்கு எதிரானவர் அல்ல, ஆனால், சட்டத்திற்கு முரணாக அரசியல் கலந்த புத்தர் சிலைக்கு எதிரானவர்கள், "சிறிலங்கா அரசே! தமிழர் தாயக பூமியில் புத்தர் சிலைகளை நிறுவாதே", இந்த புத்தர் சிலை மறுபடியும் சிறிலங்காவில் போரை ஏற்படுத்தலாம் போன்ற வாசகங்களைத் தாங்கியவண்ணம் நின்றனர்.

இந்த அமைதிப் போராட்டத்தின் முடிவில் யுனஸ்கோ இயக்குநர் நாயகத்திற்கு மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.

அந்த மனு வருமாறு.

" மே 18 ஆம் திகதி திருகோணமலை மாவட்ட நீதிபதி சட்டவிரோதமாக நிறுவப்பட்ட புத்தர் சிலையை உடன் அகற்றுமாறு கட்டளையிட்டார். மீண்டும் தனது தீர்ப்பை மே 25ஆம் திகதி உறுதிசெய்தார். ஆனால் சிறிலங்காவில் உள்ள பௌத்த அரசாங்கமும் அதன் பாதுகாப்புப் படையும் நீதிபதியின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு எதிர்மாறாக சட்டவிரோதமாக நிறுவப்பட்ட இந்தப் புத்தர் சிலைக்குப் பலத்த ஆயுதப் பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

" இதேவேளை இந்தப் புத்தர் சிலையை சட்டவிரோதமாக நிறுவியோர் இதற்கு ஓர் நிரந்தர கட்டடத்தை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

" இந்த புத்தர்சிலை விவகாரத்தில் அரசு நீதிமன்றத்தின் கட்டளையை ஒரு மாதகாலமாகியும் நிறைவேற்ற வில்லை. மாறாக ஒரு மாத காலத்தின் பின்னர் அதாவது சென்ற வாரம் ஓர் இனவாத பௌத்த நீதிபதியைக் கொண்ட மேல் முறையீட்டு பரிசீலனை நீதிமன்றத்தினால் திருகோணமலை மாவட்ட நீதிபதியின் தீர்ப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

" சிறிலங்காவைப் பொறுத்தவரையில் இங்கு தமிழ் மக்களுக்கு எதிரான எந்தவித நீதிமன்ற கட்டளைகளும் உடன் நிறைவேற்றப்படுகின்றது. ஆனால் தமிழர் விவகாரத்தில் பௌத்த சிங்களவருக்கு எதிரான எந்தவித நீதிமன்ற தீர்ப்பும் வலுவற்றதாகிவிடுகிறது.

" சிறிலங்காவில் பாதுகாப்புப் படைகளின் பிரதம தளபதியும், நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டவருமான சனாதிபதி விரும்பியிருந்தால் இந்த புத்தர்சிலை விவகாரத்தை திருகோணமலை மாவட்ட நீதிபதியின் உத்தரவுடன் மிகவும் இலகுவாக அகற்றியிருக்கலாம். மாறாக இந்தப் புத்தர் சிலைக்குப் பாதுகாப்புக் கொடுத்து சிலையை அகற்றவிடாது கவனிப்பது சிறிலங்காவில் இரு வேறுபட்ட நீதிமுறைகள் நடைமுறையில் உள்ளன என்பதைத் தெளிவாக பிரதிபலிக்கின்றன.

" எனவே சிறிலங்காவின் தேசியச் சட்டத்தின் கீழ் செயலிழந்துள்ள மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த யுனஸ்கோ நிறுவனத்தின் இயக்குனர் நாயகமாகிய உங்களிடம் நீதி கேட்டு கூடியுள்ளோம். திருகோணமலையில் இரத்தக்களரியைத் தவிர்க்கவும், இன்னுமொரு போர் மூளாமல் பார்க்கவும் நீங்கள் உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு சர்ச்சைக்குரிய புத்தர்சிலையை அகற்ற உதவுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்" என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரும்புலிகள் நாளை சிறப்பிக்க வட்டக்கச்சியில் கலந்துரையாடல்

கரும்புலிகள் தினம் தொடர்பாகவும் சமகால அரசியல் நிலைப்பாடு பற்றியதுமான கருத்தரங்கு கடந்த புதன்கிழமை வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேசப் பொறுப்பாளர் சுடர் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் கரும்புலிகள்தினம் வட்டக்கச்சிப் பிரதேசத்தில் சிறப்பான முறையில் கொண்டப்படுவதற்கான ஒழுங்குகளும் பொது அமைப்புக்களும் மக்களும் ஆற்ற வேண்டிய சேவைகள் பற்றியும் விளக்கங்கள்அளிக்கப்பட்டன. அத்தோடு இந்து ஆலயங்களுக்கான குழுத் தெரிவும் இடம் பெற்றது. இதன் அடிப்படையில் தலைவராக பசுபதிப்பிள்ளையும் உபதலைவராக குமாரசாமியும் செயலாளராக தர்மசூரியர், உபசெயலாளராக யோகநாதனும் பொருளாளராக தியாகராசாவும் தெரிவு செய்யப்பட்டு ஒன்பது பேர் கொண்ட குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. சிறப்புரையினை பிரதேசப் பொறுப்பாளர் சுடர் வழங்கினார். (12)



ஒட்டுசுட்டானில் கடந்த இருவருடங்களாகக் கட்டப்பட்டு வந்து ஸ்தம்பித நிலையிலுள்ள பிரதேச சபைக்கட்டடம். (படம்-கவியரசன்)

# கூட்டுறவுச்சங்க கட்டடம் அமைக்கக் காணி வழங்கல்

(மன்னார்)

தலைமன்னார் கிராமத்து மக்களின் நலன்கருதி ப.நோ.கூ. சங்கக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு தலைமன்னார் பங்குத்தந்தை அருட்திரு டலிமா தேவாலயத்திற்குச் சொந்தமான காணியை அன்பளிப்புச்செய்துள்ளார்.

இக் கிராமத்து மக்கள் தமது உலர் உணவுப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு நிரந்தர கட்டடமின்றி பெரும் சிரமப்பட்டு வந்துள்ளனர். நிகொட் நிறுவனம் அக்காணியில் கட்டடத்தினை அமைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகின்றது. (18)

# ப.நோ.கூ. சங்கக்கிளை நிலையம் மாதிரி விற்பனை நிலையம் திறப்பு

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிழக்கு கிளை நிலையக் கட்டடமும் மாதிரி விற்பனை நிலையமும் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்க தலைவர் த.சிறிபாலேஸ்வரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் இ.பிறையாளன் ஏற்றிவைக்க, கூட்டுறவுக் கொடியினை முல்லை மாவட்ட கூ.அ.உ.ஆணையாளர் சி.மோ.சிவமயம் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து புதிய மாதிரி விற்பனை நிலைய பெயர்ப் பலகையினை புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் செ.தயானந்தா திரைநீக்கம் செய்து வைத்தார். அடுத்து புதிய மாதிரி விற்பனை நிலைய கட்டடத்தை அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமாரும் கிழக்குகிளை நிலையத்தை அவரது துணைவர் சுகுமாரும் நாடாவை வெட்டி திறந்து வைத்தனர். தொடர்ந்து புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம சேவையாளர் த.சிவராசா, சங்கத்தின் முன்னாள் தலைவர் கி.செ. துரைரத்தினம்,புதுக்குடியிருப்பு மேற்கு கிளை செயலாளர் தா.சண்முகநாதன் ஆகியோர் உரைநிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து கௌரவ விருந்தினராக சமுகம் தந்த முல்லை மாவட்ட கூ.அ.உ.ஆணையாளரும், பிரதம விருந்தினராக சமுகந்தந்த அரசாங்க அதிபரும் சிறப்புரை ஆற்றினர்.(08)

-கரும்புலிகள் நாளை முன்னிட்டு

# கரும்புலிகள் நினைவாலய மண்டபம் மல்லாவி நகரில் திறந்து வைப்பு

(மல்லாவி)

மல்லாவி நகர்ப்பகுதியில் கரும்புலிகள் நினைவு தினத்தை முன்னிட்டு 261 கரும்புலிகளின் திருவுருவப்படம் வைக்கப்பட்ட நினைவாலய மண்டபத் திறப்பு விழா நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

காலை 10.00 மணியளவில் மல்லாவி மாவீரர் மண்டபத்தில் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சண்முகநாதன் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கரும்புலிகளின் நினைவாலய மண்டபத்தினை முல்லை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பா.அனியழகன் நாடாவினை வெட்டித்திறந்து வைத்தார்.

முன்னதாக பொதுச் சுடரினை வவுனிக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளர் தவக்குமார் ஏற்றி வைக்க தமிழீழத் தேசியக் கொடியை துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன் ஏற்றி வைத்தார் தொடர்ந்து கரும்புலிகளின் பொதுத் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை இந்துமத குருக்கள் சங்கத் தலைவர் ஏற்றியதைத் தொடர்ந்து கரும்புலி கப்டன் மொறிஸ் அவர்களின் சகோதரனும், கரும்புலி கப்டன் மங்கையின் தந்தை கரும்புலி கப்டன் பூங்குழலியின் சகோதரன் ஆகியோர் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலையினையும் அணிவித்தனர். நிகழ்வில் நினைவுரையை துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பாலசுப்ரமணியம், துணுக்காய் பிரதேச இந்துமத குருக்கள் சங்கச் செயலாளர், பாண்டியன்குள துணுக்காய் புனர்வாழ்வுக்கழக வலயப்பணிப்பாளர் நவனீதன் ஆகியோர் ஆற்றினார்கள்.

இந்நிகழ்வில் போராளிகள் பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர். (24)

# வளர்பிறை -சுனாமிச் சிறப்பிதழ் அறிமுகவிழா

(அலுவலக செய்தியாளர்)

அன்னை இல்லத்தால் வெளியிடப்படும் வளர்பிறை சஞ்சிகையின் சுனாமிச்சிறப்பிதழின் அறிமுக நிகழ்வு கடந்த 26ஆம் திகதியன்று நிறுவனப் பணிமனையில் ரட்ணம்பிள்ளை கலியுகவரதன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் கருணாநிலைய இயக்குனர் வண.சாள்ஸ் டேவிட் அடிகளாரும், சோதிமுருகேசு அவர்களும் மங்கல விளக்கை ஏற்றி வைத்தனர். வரவேற்புரையினை அன்னை இல்லத்தின் நிர்வாக ஒருங்கிணைப்பாளர் மா.பரமேஸ்வரன் நிகழ்த்தினார்.

வளர்பிறை சுனாமிச்சிறப்பிதழினை கிளி.வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா வெளியிட்டு வைக்க, கிளி.தொழில்நுட்பக் கல்லூரியின் இணைப்பாளர் சோதிமுருகேசு பெற்றுக் கொண்டார். தொடர்ந்து நூலுக்கான அறிமுக உரையினை அன்னை இல்லத்தின் இணைப்பாளர் அருட்தந்தை ச.எ.றெஜினோல்ட் அ.ம.தி நிகழ்த்தினார். தொடர்ந்து பல்துறை சார்ந்தோரின் கருத்துக்கள் நடைபெற்றது. நூலுக்குரிய பதிலுரையினை இணை நூலாசிரியர் பெ.கணேசமூர்த்தி நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் வின்சன்ற், பிரதி மாகாண சுகாதார வைத்திய அதிகாரி சத்தியமூர்த்தி, எழுத்தாளர்களான திருநாவுக்கரசு, கருணாகரன், அருளாளன் மற்றும் பல்துறைசார் ஆர்வலர்களும் கலந்துகொண்டனர்.

வன்னிப்பிரதேசத்தில் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் அன்னை இல்லத்தின் உளவளத்துணை பணி மற்றும் சுனாமியினால் உளரீதியில் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களுடன் அம்மக்களுக்கான ஆற்றுப்படுத்தலையும், மையப்படுத்தும் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை என இவ்விதழ் விரிகின்றது. (கு)

# கும்பாபிஷேகம்

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஈஸ்வரர் ஆலயக் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழனன்று ஆரம்பிக்கப்பட்டு 11ஆம், 12 ஆம் திகதிகளில் எண்ணெய்க் காப்பு நடைபெறும். 13ஆம் திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மன்னார் பிரதேசத்தின் அபிவிருத்திக் கூட்டம்

(மன்னார்)

மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தில் அபிவிருத்திக் கூட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழனன்று மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்து திணைக்கள தலைவர்களும், மாந்தை மேற்குப் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து கிராம அபிவிருத்தித் தலைவர்கள், கிராமிய மாதர் அபிவிருத்திச்சங்க பிரதிநிதிகள், பொது அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.


இதன் போது மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்று வரும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாகவும், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் அனைவரது கருத்துக்களும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எஸ். இனியவன், மன்னார் மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சர்வன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளையும், ஆலோசனைகளையும் வழங்கினர். (18)

# பற்சிகிச்சை

அளம்பில் திலீபன் மருத்துவ சேவையின் பற்சிகிச்சைப் பிரிவினரால் அளம்பில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையில் விசேட பற்சிகிச்சை சேவை இடம்பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய் இடம் பெற்ற இச்சேவையில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர். (20)



கனடா நேற்று முன்தினம் தனது138 ஆவது பிறந்தநாளை (Canada Day) கொண்டாடிய அதேவேளை இங்கு வாழும் பல்லின மக்களும் தமது தாய் நாட்டை பண்பாட்டை சித்திரிக்கும் வகையில் தம்மை அடையாளப்படுத்துவதற்காக ஊர்திப்பவனி சென்றனர். அந்த வகையில் அவர்களுடன் எம் தேசத்து உறவுகளும் எமது புலிக்கொடியுடன் கனடாவில்.....

தகவல். rr ங்கள் சோ. எழிலன்

# பொதுக்கட்டமைப்பு நடைமுறை தொடர்பாக பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்!

## யாழ். மாவட்ட பா.உ. பத்மினி சிதம்பரநாதன்



(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா அரசிடம் எந்தவிதமான நம்பிக்கையும் எங்களுக்கு இல்லை. எனவே இந்த அரசினூடாக இந்த சுனாமி நிவாரணம் மக்களைச் சென்றடையாது, ஆகவே வேறு வழிகள் மூலம் அந்த உதவிகளை கிடைக்கச் செய்யும்படி கூறிவந்த வேளையில் தான் வெளிநாட்டு தூதராலயங்களும் அதை உணர்ந்து கொண்டன. அதன் விளைவாகத் தான் இன்று பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அந்தப் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டாலும், கூட அது எவ்வாறு நடைமுறையில் வரப்போகின்றது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.**

இவ்வாறு யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநா தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழர் தாயகத்தில் ஒரு நடை முறை அரசு உருவாகியிருக்கின்றது. ஒரு நிர்வாகம் இருக்கின்றது. ஒரு காவல்துறை இருக்கின்றது.எங் களுக் கென்று ஒரு மனித உரிமை அமைப்பு இருக்கின்றது. ஒரு அர சுக்கு என்னென்ன கட்டமைப்புக்கள் தேவையோ அவையெல்லாம் கொண்டதாக இவ் நடைமுறை அரசு உருவாகியுள்ளது.

இந்த நிலைமை உருவானது ஆயுதப்போராட்டத்தின் விளைவாக தான். அதனூடாக கிடைத்த வெற் றிகள் தான் எழுபது வீத நிலப் பரப்பை விடுதலைப்புலிகள் தங்க ளுடைய கட்டுப்பாட்டில் நிர்வாகம் நடத்துகின்ற நிலையை உருவாக்கி யது வெளிநாடுகளும் எங்களை அங்கீகரித்து எங்களுடைய குரலை அவர்கள் கேட்கத் தொடங்கினார்கள். அதன் பலனாக பேச்சுவார்த்தை நடாத் தப்பட்டு 2002 ஆம் ஆண்டு புரிந்து ணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப் பட்டு ஆறு சுற்றுப் பேச்சு வார்த்தை கள் நடைபெற்றன.அதனூடாக சிரான் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. சிரான் அமைப்புக்கு நடந்தது உங்களுக்கு தெரியும்.

அதன் பின்பு இன்றைக்கு பொதுக்கட்டமைப்பு என்ற பெயரில் கையெழுத்து வைத்திருக்கிறோம் இந்த நிலைக்கு நாங்கள் போக வேண்டி வந்ததன் காரணம் இராணுவ ரீதியில் பாதிக்கப்பட்ட அதே மக்கள் இந்த சுனாமி பாதிப்பால் மிகவும் பாதிக்கப்பட்டனர் அந்த வேளையில் அவர்களுடைய நிவாரணத்தை வழங்கவேண்டியேற்பட்டதால் பொதுக் கட்டமைப்பு தேவை என்று நாங்கள் வெளிநாடுகள் தூதராலயங்கள் எல் லாம் சென்று விளங்கவைத்தோம்.

எங்களுடைய வரலாறு தொடர்ந்து கையெழுத்திடுவதும் அது கிழிக் கப்படுவதும், பின் அது கைவிடப்படு வதும் தான். அந்த வகையில் நாங்கள் இதையும் விழிப்புடன் அவதானிக்க வேண்டும். இதில் அரசியல் ரீதியாக நாங்கள் இன்னும் கூர்மைப்படவேண்டியுள்ளது.பொது மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டிய காலம் சிரானுக்கு நடந்தது இந்தப் பொதுக் கட்டமைப்புக்கும் நடக்காமல் விழிப்போடு இருக்க வேண்டும்.

பொதுக்கட்டமைப்பினூடாக ஒரு முக்கியமான விடயத்தை உணரலாம் இலங்கையில் இரண்டு நிர்வாகங்கள் இருக்கின்றன என்பதை வெளி நாடுகள் ஏற்றுக்கொண்டிருக் கின்றன. அந்த வகையில் தான் எங்களுக் குரிய கொடுப்பனவுகள் எல்லாம் விடுதலை புலிகளினூடு வருவதற் கான ஒரு கட்டமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது. இந்தக் கட்டமைப்பை செய்ய வல்லவர்கள் விடுதலைப் புலி கள் தான் என்பதையும் இது காட்டியி ருக்கின்றது. இவையிரண்டும் பொதுக் கட்டமைப்பினூடாக கிடைத்தபெறு மதியான செய்திகள் தமிழர்களுடைய உரிமைகளை பொறுத்தவரையில் பொதுக்கட்டமைப்பு என்பது ஒரு சிறு துளி நாங்கள் பெற வேண்டிய உரிமை மிகப்பாரியது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எழுத்துப்பரீட்சை

வட இலங்கை சங்கீத சபையினரால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடாத்தப்படுகின்ற நுண்கலைப் பாடங்களுக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் இருபத்து மூன்றாம், இருபத்து நான்காம் திகதிகளில் நடைபெறவுள்ளது என வட இலங்கை சங்கீத சபை யாழ்.இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.வயலின், நடனம், சங்கீதம்,பாட்டுமிருதங்கம், ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகளும் நடைபெறவுள்ளன. (சு)

# கடற்றொழிலில் "பாஸ்" கெடுபிடி: சுழிபுரம் கடற்றொழிலாளர் முறைப்பாடு!

## மீன்பிடித்தொழில் பெரிதும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தின் சுழிபுரம் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்ட அப்பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களில் ஒரு பகுதினருக்கு கடற்படை தடைவிதித்துள்ளமை தொடர்பாக பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர் குடும்பங்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும் கடற்புலிகளின் அரசியல்துறை அலுவலகத்திலும் புகார் செய்துள்ளன.

இது பற்றி மேலும் தெரிய வருகையில், சுழிபுரம் மற்றும் அதனை அண்டிய கடற்கரைப்பகுதிகளில் அண்மைய சுனாமி அனர்த்தத்தின் பின்னர் தற்போது மீண்டும் கடற்றொழில் சுமுக நிலையை அடைந்து வருகின்றது. எனினும் அங்கு நிலைகொண்டுள்ள கடற்படையினர் உரிய 'பாஸ்' அனுமதியின்றி தொழிலில் ஈடுபட அனுமதி மறுத்துவருகின்றனர்.

இந் நிலையில் மீண்டும் தொழிலில் ஈடுபடுவதற்காக 'பாஸ்' அனுமதியை தந்து உதவுமாறு கோரி அப்பகுதியைச் சேர்ந்த கடற்றொழில் குடும்பங்கள் கடற்படையிடம் கோரியிருந்தன.

எனினும் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி அக்குடும்பங்கள் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியை கடற்படை மறுத்துள்ளது.

இதையடுத்தே அவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்திலும், கடற்புலிகளின் அரசியல்துறை அலுவலகத்திலும் முறையிட்டுள்ளனர்.

குறிப்பாக பல இலட்சரூபா செலவில் புதிய படகுகள் மற்றும் வலைகளைத் தாம் தற்போது கொள்வனவு செய்துள்ளதாகவும், கடற்படையினரின் இந்த நடவடிக்கையால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தாகவும் அம் முறைப்பாட்டில் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரியாக பொறுப்பேற்றிருக்கும் மேலாளர் பிரியதர்சன் சுழிபுரம் பகுதிக்கு நேரில் சென்று கடற்படை அதிகாரியை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு நடாத்தியுள்ளார். (27)

# பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விவகாரம்; நேரில் சென்று விசாரணை நடத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில் இயங்கி வரும் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியை வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசாமி மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் செய்யவேண்டும் என்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கை குறித்து நேரிற்சென்று விசாரணை நடத்தி முடிவெடுப்பதென்று கொழும்பில் நேற்று முன்தினம் கல்வி அமைச்சில் நடைபெற்ற மாநாட்டில் தீர்மானிக் கப்பட்டது.

தேசியக் கல்வியியல் கல்லூரிகளுக்கு பொறுப்பான அதிகாரிகள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் பலாலி ஆசிரிய பயிற்சிக்கல்லூரி அதிபர் கோப்பாய் தேசிய கல்வியியல்கல்லூரி அதிபர் மற்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஆகியோர் இச்சந்திப்பில் பங்குபற்றினர்.

அதன் பின்னர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்ததாவது, பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி தற்போது திருநெல்வேலியில் இயங்குகின்றது. அதனை மூடிவிடுவது என்று முன்பு முடிவு செய்யப்பட்டது. இப்போது மூடுவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியுடன் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி இணைக்கப்படமாட்டாது. பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசாமி ம.ம.வியுடன் இணைப்பது பற்றி பின்னர் முடிவு செய்யப்படும் அதற்கு முன்பு கல்வி அமைச்சு அதிகாரிகள் குழு அங்கு விஜயம் செய்து நிலவரத்தை நேரில் பார்வையிடுவது என்ற முடிவு செய்யப்பட்டுள்ளது' என்று பொதுச் செயலாளர் மகாசிவம் தெரிவித்தார். (25)

# "கரும்புலிகள் நாள்" கவிதைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நாளையொட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியின் முடிவுகள் வெளியாகி உள்ளன.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கரும்புலிகள் நாளான யூலை ஐந்தாம் திகதி பேரவையின் கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணிக்கு இடம் பெறும் வெற்றியீட்டியவர்களுக்குரிய பரிசில்களும், பதக்கங்களும், சான்றிதழ்களும் அன்றைய தினம் வழங்கப்படும்.

முதலாவது இடம் "மெள்ளவே பிறக்கும் ஈழம்" தம்பிராசா பரமலிங்கம் வண்-வடமேற்கு, இரண்டாவது இடம் "தனியொருவனல்ல" எம். சந்திரகாந்தா 12,32 ஆவது ஒழுங்கை வெள்ளவத்தை, மூன்றாவது இடம் " நாளைய விடியல் எமக்காக" சி.அகிலன் அண்ணா சிலையடி கரணவாய்.

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்:

"அன்பான உறவுகளுக்கு" பா.சஞ்சீவன் கனகாம்பிகை குளம் அ.த.க கிளிநொச்சி, "கறுப்புடை தரித்த நிழல்களால்" என். பிறேம் சீலன் கோண்டாவில் வடக்கு, "என் முற்றத்துப் பூவரசு" பா. தீபச்செல்வன் முதலாம் வருடம் கலைப்பீடம் யாழ்.பல்கலைக்கழகம், " திசைகளில் பறக்கும் தென்றல்கள்" தமிழீழ கவிராயர் பருத்தித்துறை வீதி நல்லூர், "தமிழ்த்தேசம் படைத்திடுவோம்" ஆ.சவரிப்பிள்ளை (மாரீசன்) ஊற்றுப்புலம் கிளிநொச்சி, "தேச விடுதலைக்காக" ப.பத்மன் யாழ்/மல்லாகம் மகாவித்தியாலயம், "விடியலை நோக்கி விரைந்திடுவோம்" திருமதி.மாலாதேவி மதிவதனன் அளவெட்டி மத்தி, "விடியலுக்காக விரைந்தவர்" ப.சந்திரகலா உரும்பிராய், " கனக்கும் நெஞ்சு" கா.சுஜோ (போராளி) பொன்னம்பலம் மருத்துவமனை கிளிநொச்சி, "எம்மண்ணை மீட்ட கரும்புலிகள்" கவிஞர் செ.பரமநாதன் தாவடி, "வரலாறு உம்மை நினைக்கும்" வைஸ்ணவி ஏழுமலை நிமலன் புகைப்படக் கலையகம் மல்லாவி, "பூசிக்கப்பட வேண்டியவர்கள்" சி.விஸ்வராஜ் கோட்டைக் கல்லாறு மட்டக்களப்பு, " மீள்வோம், மீட்டெடுப்போம்" வைத்தியர் ச.முருகானந்தன் அரசினர் வைத்தியசாலை, முழங்காவில், "தேச விடுதலை" Z.அல்ஸிபாத் 35 ரதீமல்யாய புத்தளம், "காற்று தவம்" செல்வி காயத்திரி இராஜேஸ்வரன் விவசாய பீடம் யாழ். பல்கலைக்கழகம்.

# அடுத்த சனாதிபதித் தேர்தலில் சு.க. வேட்பாளர் யார்?

சிறிலங்காவின் அடுத்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிக்கான தேர்தல் எப்பொழுது? அடுத்ததேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சனாதிபதி வேட்பாளர் யார்? என்ற கேள்விகள் தற்பொழுது பலமாக எழுந்துள்ளன.

இந்தக் கேள்விகள் எழுந்துள்ள வேகத்தைப் பார்க்கும்போது முதலில் ஒன்று புரிந்து கொள்ளப்படுகின்றது. அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை இல்லாது ஒழிப்பது என்ற 11 வருடங்களுக்கு முந்தைய சனாதிபதி சந்திரிகாவின் கோஷம் இப்போது கைவிடப்பட்டு விட்டது என்பதாகும்.

இந்தக் கோஷத்தை இப்பொழுது சந்திரிகா எழுப்புகிறார் தான். ஆனால் அதற்குச் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலேயே ஆதரவு இருக்காது என்பதையே அடுத்த வேட்பாளர் யார்? என்று இன்று எழுந்துள்ள கேள்வி புலப்படுத்துகிறது.



1994இல் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மீட்பராக வந்த சந்திரிகா குமாரதுங்க இவ்வருட இறுதியில் அரசியலை விட்டு ஒதுங்குவாரா? அல்லது இரகசிய சத்தியப் பிரமாணத்தைப் பயன்படுத்தி அடுத்த ஆண்டின் இறுதியில் விடைபெறுவாரா? என்பது இப்பொழுது உள்ள முதன்மையான கேள்வி.

அவரை இவ்வருட இறுதிக்குள்ளேயே வெளியேற்றும் நோக்கத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. இந்தப் போராட்டம் ஐ.தே.க.வின் செல்வாக்கை அறியும் அளவு கோலாக அமையலாம். ஆனால் இது மட்டும் சனாதிபதியை வெளியேற்றிவிடப் போவதில்லை என்பது உண்மை.

ஆனால் பாராளுமன்றத்தில் சிறுபான்மைக் கட்சியாக பொதுசன ஐக்கிய முன்னணி உள்ளது. இதன் மூலம் சனாதிபதிக்கு எதிராகக் குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்படலாம். எனினும் அதுவும் இலகுவாகச் செய்து முடிக்கக்கூடிய காரியமல்ல. இதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை, உயர் நீதிமன்றம், சர்வசன வாக்கெடுப்பு என்று ஏகப்பட்ட தடைகள் உள்ளன.

மேலும் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் ஒருவருடங்களைத் தாண்டி விட்ட நிலையில் இவ்வாறு பிரேரணை கொண்டுவரப்படப் போகின்றது என முன்கூட்டியே சனாதிபதியால் அறிந்து கொள்ளப்பட்டால் பாராளுமன்றத்தை அவர் கலைத்துவிடலாம். அல்லது பிரேரணை கொண்டு வரப்பட்டாலும் பாராளுமன்றத்தைச் சில மாதங்களுக்கு ஒத்திவைத்து காலத்தை இழுத்தடிக்கலாம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக சனாதிபதி பதவி நீக்கம் செய்யப்பட்டாலும், பிரதமர் ஒரு மாதகாலம் சனாதிபதியாகப் பதவி வகித்து பின்னர் சனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் முடியும் வரை பாராளுமன்றம் சனாதிபதியாக ஒருவரைத் தெரிவு செய்யும்.

இவ்வாறான நிலையில் ஐ.தே.க.வைச் சேர்ந்த ஒருவர் அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கு முன் சனாதிபதியாக வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது. எனவே போராட்டம் அடுத்த சனாதிபதித் தேர்தலை இலக்குவைத்ததாகவே இருக்கும். அத்துடன் ஜே.வி.பி. போன்ற கட்சிகள் அண்மைக்காலத்தில் நடத்திய போராட்டங்களுக்குப் பதில் போன்றதாகவே அமையும்.

இந்நிலையில் அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக நியமித்து பிரச்சார நடவடிக்கைகளையும் ஆரம்பித்து விட்டது. ஆனால் ஏனைய கட்சிகள் எவையும் இன்னமும் சனாதிபதி வேட்பாளர் குறித்து அறிவிக்கவில்லை.

இப்பொழுது ஆளும் கட்சியாகவுள்ள பொது ஐக்கிய முன்னணி வேட்பாளர் ஒருவரைத் தெரிவுசெய்வதில் சந்தித்துள்ள நெருக்கடியானது, அதன் பலவீனமான தன்மையைக் காட்டுகிறது.

இவ்வாறு வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு ஏற்பட்டுள்ள தாமதம் அதற்கான போட்டி கட்சிக்குள் இருப்பது மட்டும் தான் காரணம் என்று கூறிவிட முடியாது. அந்த வேட்பாளரை நியமிக்க வேண்டிய பொறுப்பிலுள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை ஒழித்து புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குதன்மூலம் தனது அரசியல் எதிர்காலத்தை நீடித்துக் கொள்ளும் கனவில் இருப்பதும் முக்கிய காரணமாகும். அது நனவாகும் சாத்தியங்கள் குறைவாக இருப்பினும் அவர் அது குறித்த நப்பாசையுடன் இருக்கிறார் என்பதை மறுத்துவிடமுடியாது.

சனாதிபதித் தேர்தல் எப்பொழுது நடந்தாலும் அவரது இந்த ஆசை ஒழியும்வரை வேட்பாளர் ஒருவரை நியமிப்பார் என எதிர்பார்க்க முடியாது.

அதாவது அவரது கனவு நனவாகாது எனத் திடமாக உணர்ந்து கொள்ளும்வரை பொதுசன ஐக்கிய முன்னணியின் அடுத்த சனாதிபதி வேட்பாளர் யார்? என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கமாட்டார்.

ஆனால் அதற்காக அந்தப்பதவிக்கு முனைந்து நிற்பவர்களிடையேயான போட்டி இல்லாது போகாது. இப்பொழுது இந்தப் போட்டியிலே முக்கியமானவர்களாக மூவர் இருக்கின்றனர். மகிந்த ராஜபக்ஷ, அநுராபண்டாரநாயக்க, மங்கள சமரவீர ஆகிய மூவருமே இப்போட்டியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் மங்களசமரவீர மிகவும் பலவீனமான போட்டியாளர்ஆனால் அவர் இதிலிருந்து விலகியிருக்கிறார் என்று அடித்துக்கூறி விட முடியாது. முதல் வந்த செய்திகள் மகிந்த ராஜபக்ஷவை சனாதிபதி வேட்பாளராகவும், தேர்தலில் வெற்றி பெற்ற பின் பிரதமராக அநுராவையும் நியமிக்க மங்களசமரவீர சனாதிபதி சந்திரிகாவிடம் சிபார்சு செய்யப் போவதாகத் தெரிவித்தன.

ஆனால் பின்னர் அவர் பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் தன்னையும் ஒரு போட்டியாளராக அறிவித்தார். அதற்கு அவர் கூறிய காரணம் யாதெனில் ஜே.வி.பி யினர் ஆட்சியை விட்டு வெளியேறியதால் கட்சி மீதும் சனாதிபதி மீதும் கோபம் கொண்டு தான் கட்சியை விட்டு வெளியேறி விடப்போவதாகச் சிலர் கூறி வருவதாகவும், ஆனால் அவ்வாறு இல்லை என வெளிப்படுத்தவே தான் கட்சியின் சனாதிபதி வேட்பாளருக்கான போட்டியாளராக இருக்கப்போவதாவும் தெரிவித்தார்.

மங்கள சமரவீரவைப் பொறுத்து அவர் மக்களிடம் செல்வாக்குப் பெற்றவரோ இல்லையோ சனாதிபதி மீது பெரும் செல்வாக்குச் செலுத்துபவராகவே இருந்து வருகிறார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாகவும் ஆட்சிப் பீடமேறவும் அவரது அந்தச் செல்வாக்கே பெரும் காரணமாக அமைந்தது.

அநுரா பண்டாரநாயக்கவும் இந்த முன்னணி உருவாகுதல் தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தாலும் அவரை நம்பி சனாதிபதி சந்திரிகா கூட்டு முன்னணி தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு விடவில்லை. மங்கள சமரவீரவின் அழுத்தம் காரணமாகவே அவர் இவ் ஒப்பந்தத்தில் ஈடுபட்டார்.

இக்கூட்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குப் பயன்தரும் வகையில் நிலைத்திருக்குமாயின் மங்களசமரவீர பலம்மிக்க ஒரு போட்டியாளராக அமைந்திருக்க முடியும். ஆனால் இப்பொழுது அவர் கட்சிக்குள் பலம் குன்றியவராகிவிட்டார் என்பதை அவரிடமிருந்த ஊடகத்துறை பறிப்பு வெளிக்காட்டியது. எவ்வாறாயினும் அது முற்று முழுதாக அவரின் வீழ்ச்சியைக் காட்டுவதாகவும் கூறி விடமுடியாது.

கடந்த நாட்களில் கொழும்பிலும் வேறு இடங்களிலும் காணப்படும் ரணிலுக்கு எதிரான சுவரொட்டிகள் மங்களசமரவீரவின் தயாரிப்புக்கள் என அவரே வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார். இது சனாதிபதியின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டதாயின் மங்களசமரவீரவின் செல்வாக்கை அது எடுத்துக்காட்டுவதாக அமையலாம். அதேவேளை சனாதிபதியின் இரட்டை வேடத்தையும் அது எடுத்துக் காட்டும்.

அடுத்து பிரதான போட்டியாளர்களில் அநுரா பண்டாரநாயக்க பலவீனமானவர் என்றே கூறலாம். அவருக்குள்ள ஒரே பலம் இப்பொழுது சகோதரி சனாதிபதி சந்திரிகாவின் கையில் அகப்பை இருப்பதே. அதாவது வேட்பாளரை அறிவிக்கும் பொறுப்பு சனாதிபதி சந்திரிகாவின் கையில் இருப்பதே.

நாட்டை ஆண்டுவரும் பண்டாரநாயக்க பரம்பரையின் இறுதி பண்டாரநாயக்க தானொருவர் இருப்பதாகவும் தனது 12 வருட ஆட்சியின் பின்னர் யாராயினும் கட்சியைக்கைப்பற்றிக் கொள்ளலாம் என்றும் அதுவரை விலகியிருக்க வேண்டும் என்றும் அனுராபண்டாரநாயக்க கூறியிருக்கிறார்.

அவரதுதாயார் சிறிமாவோ பண் டாரநாயக்க இறக்கும்வரை எதிர்க்கட்சியாகிய ஐ.தே.க.வில் இருந்த அவர் பின்னர் தாயாரின் மரணச் சடங்கில் ஏற்பட்ட உறவின் அடிப்படையில் மீண்டும் சு.க. வில் இணைந்து கொண்டார். உண்மையில் சு.க.வின் வீழ்ச்சிக் காலத்தில்- அது மிகவும் நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டிருந்த காலத்தில் அக் கட்சியில் அநுரபண்டாரநயக்க இருந்தார். எதிர்க்கட்சித் தலைவராகவும் அவர் பதவி வகித்தார்.



ஆனால் ஐ.தே.க.வை வீழ்த்த அவர் தகுதியானவரல்ல என்பதன் அடிப்படையில் சந்திரிகா குமாரதுங்க சு.க.வின் தலைமைப் பதவிக்குக் கொண்டு வரப்பட்டதால் ஏற்பட்ட மனக் கசப்பே அவர் சு.க.வை விட்டு வெளியேறக் காரணமாகியது.

அவரது கருத்துப்படி 11 வருடங்களுக்கு முன்னரே அவர் சனாதிபதி வேட்பாளராக இருந்திருக்க வேண்டியவர். ஆனால் இப்பொழுதும் அதற்கான தகுதி அவரிடம் இல்லை என்பதே பெரும்பாலான கட்சி அங்கத்தவர்களினதும், ஆதரவாளர்களினதும் தென்பகுதி அரசியல் ஆய்வாளர்களினதும் கருத்தாகும். இது அவரைப் பலவீனமானவராக்கியுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏதாவது திரிசமன்-சுத்துமாத்து செய்யாதிருந்தால் சு.க.வின் சனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப் படக்கூடிய தகுதியில் இருப்பவர் மகிந்த ராஜபக்ஷவே அவருக்கு எதிராக உள்ள ஒரேயொரு மிகப்பெரிய தடைசனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே - அநுரா அல்ல என்பது வெளிப்படையான விடயமாகும்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் ஜே.வி.பி வெளியேறவிருந்த வேளையில் மகிந்தராஜ பக்ஷவே சனாதிபதி வேட்பாளர் என சந்திரிகா அறிவித்திருந்தார். ஆனால் இப்பொழுது மீண்டும் அந்தச்சர்ச்சை எழுந்திருப்பது சந்தேகத்தைக் கொடுக்கிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மாவட்டக் குழுக்கள் பல கூடி அவரை சனாதிபதி வேட்பாளராக அறிவிக்குமாறு கோரிவருவதாக செய்திகள் கூறுகின்றன. கட்சி உறுப்பினர்கள் அமைப்பாளர்களிடம் அவருக்குள்ள செல்வாக்கே அவரை எதிர்க்கட்சித் தலைவராகவும் பின்னர் பிரதமராகவும் ஆக்கியது. சனாதிபதி சந்திரிகா அதனை விரும்பிச்செய்து விடவில்லை.

சனாதிபதி வேட்பாளராக அநுரா வருவதற்குத் தடையாக அமைந்துள்ள மகிந்தராஜபக்ஷவை ஓரம்கட்ட முதலில் இரட்ண சிறி விக்கிரமநாயக்கவை பிரமதராகவும் பின்னர் 2002இல் எதிர்க்கட்சித்தலைவராகவும் சனாதிபதி சந்திரிகா நியமித்தார்.

பின்னர் 2004 ஏப்ரலில் ஆளும் கட்சியாக ஐ.ம.சு.மு. வந்தபோதும் மகிந்தராஜபக்ஷவை விட கதிர்காமரையோ, அல்லது இரட்ணசிறி விக்கிரமநாயக்கவையோ பிரதமராக்கவே சந்திரிகா விரும்பினார். ஆனால் அவரால் அது முடியாமற் போனமைக்கு மகிந்தராஜ பக்ஷவின் செல்வாக்கே காரணமாக அமைந்தது.

அத்துடன் ராஜபக்ஷ குடும்பம் பண்டாரநாயக்க குடும்பத்துக்கு இணையாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் அங்கம் வகிப்பதும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அவர்களின் செல்வாக்கு கொடிகட்டிப்பறப்பதும், பௌத்தத்தின் காவலராக இப்பொழுது மகிந்த ராஜபக்ஷவையே பௌத்தபிக்குகள் நம்பியிருப்பதும் அவரது செல்வாக்கு அதிகரிப்புக்கு காரணங்களாகும்.

எவ்வாறாயினும் சனாதிபதி சந்திரிகா சனாதிபதி வேட்பாளர் தெரிவின் போது அடுத்த தேர்தலிற்கான வெற்றிவாய்ப்பு சு.க.வுக்கு இருப்பின் அநுராவை வேட்பாளராக நியமிக்கக் கூடுமென சிலர் கூறுகின்றனர்.

ஆனால் ரணிலுக்கு சரியான போட்டியாளராகவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குச் சரிந்து செல்லும் செல்வாக்கைத் தூக்கி நிமிர்த்தக் கூடியவராகவும் உள்ளவர் மகிந்தராஜபக்ஷவே என தென்னிலங்கை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும் இப்பொழுது உள்ள சூழலில் விரைவில் சு.க.வின் சனாதிபதி வேட்பாளர் யார்? என்பதை அறிவிக்கவேண்டும் என்பதே சு.க. ஆதரவாளர்களின் வலிமையான கோரிக்கையாக உள்ளது.


இந்நிலையில் ஜே.வி.பி, ஜாதிகஹெல உறுமய என்பனவும் சனாதிபதி வேட்பாளர்களை நியமிப்பது தொடர்பில் கவனம் செலுத்துகின்றன. முதலில் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? போட்டியிடாவிட்டால் யாருக்கு ஆதரவளிப்பது? என்பது போன்ற கேள்விகளுக்கு அவை இப்பொழுது விடைதேடிவருகின்றன. அதற்குப் பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்பா? ஆதரவா? என்பதையே அளவுகோலாக அவை வைக்கத்தீர்மானித்துள்ளன.

இரு கட்சிகளும் சேர்ந்து ஒரு பொது வேட்பாளரை நியமிப்பது பெரும்பாலும் சாத்தியமில்லை. எனினும் மகிந்த ராஜபக்ஷ பௌத்தத்திற்கு ஆதரவானவர் என்ற ரீதியில் ஜாதிகஹெலஉறுமய அவரை ஆதரிக்கக் கூடும். ஜே.வி.பி யும், சு.க.விற்கு மகிந்தராஜபக்ஷ தலைமை வகித்தால் மீண்டும் இணையலாமா? என்ற கேள்வியுடன் இருக்கின்றது. எவ்வாறாயினும் சனாதிபதித்தேர்தல் எப்பொழுது என்ற கேள்விக்குத் தெளிவான பதில் கிடைக்கும் வரை ஏனைய விடயங்களும் அதே நிலையிலேயே இருக்கும்.

**வேலவன்**

# சமாதானம் மெல்ல மெல்ல நழுவிப்போகின்றது போர் எங்களை நோக்கி நகர்த்தப்படுகின்றது

## -கரும்புலிகள் நினைவு நிகழ்வில் பொன்.தியாகம்



(அலுவலக செய்தியாளர்)

"சமாதானம் என்பது மெல்ல மெல்ல நழுவிப்போய்க் கொண்டிருக்கின்றது. எதிரியானவனால் எங்களை நோக்கி போர் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுவே இன்றையயதார்த்த மாகும்."

இவ்வாறு கிளிநொச்சியில் நடைபெற்ற கரும்புலி மாவீரர் களின் நினைவு நிகழ்வில் கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் வைக்கப்பெற்ற சிறப்பு பந்தலினை நேற்றுக்காலை 9.00 மணிக்கு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் திறந்துவைத்து நினைவுரை நிகழ்த்துகையில் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;நாங்கள் வாழத்துடிக்கிறோம். கரும்புலிகள் மாவீரர்களுடன் அனைத்து மாவீரர்களும் மக்களையும் வருங்காலச் சந்ததியினை சுதந்திர மண்ணில் சுபீட்சமாக வாழவைப்பதற்காக தங்களை ஆகுதியாக்கியவர்கள் சுதந்திரவேட்கை என்ற ஒரே இலட்சியத்திற்காக தங்கள் இன்னுயிர்களை ஆகுதியாக்கியவர்கள்.

இந்த ஒவ்வொரு மாவீரர்களின் தியாகம்தான் இன்று சர்வதேசத்தின் முன் தமிழ்மக்களை தலை நிமிர வைத்துள்ளது.

எமது விடுதலைப்போராட்டம் நீதியானது, நேர்மையானது என்பதனை இன்று சர்வதேசம் ஏற்றுக்கொள்வதற்கு இம் மாவீரர்களின் அர்ப்பணிப்பே காரணமாகும்.

சமாதானம் என்பது மெல்ல மெல்ல நழுவிப்போய்க் கொண்டிருக்கிறது. எங்களை நோக்கி எதிரியினால் போர் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தநிலையிலும் நாங்கள் போரை நகர்த்தவில்லை.

இதை அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும். எதிரியினால் போர் நகர்த்தப்படுகின்றது. அதனை எதிர்கொள்ள நாங்கள் தயார் நிலையில் உள்ளோம். மக்கள் அனைவரும் எதிரியானவனின் நயவஞ்சக தந்திரோபாயங்களை முறியடிக்க தயாராக வேண்டும் எமது வருங்கால சந்ததியினை தமிழீழமண்ணில் சுதந்திரமாக சுபீட்சமாக வாழவைக்க தயாராக வேண்டும் என்பதனை இந்த மாவீரர் நினைவு நாளில் அனைவரும் நெஞ்சில் நிறுத்திக்கொள்வோம் என்றார்.

முன்னதாக கிளிநொச்சிக் கரைச்சிப்பிரதேச செயலக வளாகத்தில் விசேடமாக அமைக்கப்பெற்ற பந்தலில் கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் வைக்கப்பெற்று ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.



கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவை இணைப்பாளர் சிவகுமார் தலைமையில் நேற்றுக்காலை 9.00 மணிக்கு ஆரம்பமான மேற்படி நினைவு நிகழ்வில் பொதுஈகச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட வருவாய்த்துறைப்பொறுப்பாளர் தயாபரன் ஏற்றி வைக்க, தமிழீழதேசியக் கொடியினை வடபோர் முனை தளபதிகளில் ஒருவரான வீரமணி ஏற்றிவைத்தார். கரும்புலி மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி இடம் பெற்றது.

கிளி.மாவட்ட திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் கே.வீ.கே திருலோகமூர்த்தி அவர்களும் உரையாற்றினார்.

(சோ)

# தமிழர் புனர்வாழ்வுக்கழக ஏற்பாட்டில் எட்டாவது தமிழர் விளையாட்டு விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரான்ஸில் எட்டாவது தடவையாக நடாத்தும் தமிழர் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் இரவு 8.00 மணி வரை லூா பூசே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நுழைவாசலில் இருந்து கரகாட்டம், காவடியாட்டம், தவில் நாதஸ்வரக் கச்சேரியுடன் மக்கள் கூட்டமாக கொடிக்கம்பம் வரை வந்தனர் அங்குகாலை 9.30மணிக்கு பிரான்ஸ் தேசியக்கொடி, தமிழீழதேசியக் கொடி புனர்வாழ்வுக்கழகக் கொடி யேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

பிரான்ஸ் வாழ் தமிழ் மக்களிடையே ஒன்றுகூடல் - மகிழ்வாகப் பொழுதைப் போக்கல் மற்றும் பாரம்பரிய உணவு - விளையாட்டு வழக்கங்களை இளைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தல் ஆகிய நோக்கை ஒரு புறமும், இந் நிகழ்வுகளின் மூலம் திரட்டப்படும் நிதியை இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதியில் இடம்பெறும் சமூகமேம்பாட்டுப் பணிகளுக்கு வழங்குவதை மறுபுறமும் நோக்காகக் கொண்டே தமிழர் விளையாட்டு விழா இம்முறை நடாத்தப்படுகின்றது.

தமிழர் விளையாட்டு விழாவில் சிறுவர்களுக்கான போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், விநோதவுடை நிகழ்வுகள், வழுக்குமரம் ஏறுதல், கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, சங்கீதக்கதிரை, தாச்சி, மேலைத்தேய நடனங்கள், நீங்களும் பாடலாம், ஜனரஞ்சகப் போட்டிகள், உதைபந்தாட்டம், கிரிக்கெட், கரப்பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், கரம், சதுரங்கம் எனப் பற்பல நிகழ்வுகள் குழுக்களாக, கழகங்களாக, தனிநபர்களாக இடம் பெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகள், சுனாமி சிறப்பு நிழற்படக்கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

புலத்திலும் தாய்நிலத்திலும் வலுச்சேர்க்கும் இந்த விளையாட்டு விழா ஆண்டு தோறும் இடம்பெற்று வருகிறது. இவ்விழாவில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பிரான்ஸ், உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் பிரான்ஸ், பிரான்ஸ் தமிழ்ச்சங்கள் இணைந்து கரம்கொடுத்து நிற்கின்றன.

# டக்ளஸ் வீட்டிற்கு அருகில் நடமாடிய ஐவர் கைது!

(கொழும்பு)

சிறிலங்கா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வீட்டிற்கு அருகே சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார்கள் என்ற குற்றச்சாட்டில் ஐந்து தமிழ் இளைஞர்கள் கடந்த வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரவு 11 மணியளவில் கொழும்பு லெயாட்ஸ் வீதியிலுள்ள டக்ளஸ் தேவானந்தாவின் வீட்டிற்கருகே நடமாடிய இந்த இளைஞர்களை பம்பலப்பிட்டி பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

பொலிசாரின் விசாரணையின் போது இவர்கள் பதிலளிக்க தடுமாறியதாகவும், தங்களை உறுதிப் படுத்தக்கூடிய ஆவணங்கள் எதனையும் இவர்கள் வைத்திருக்கவில்லை என்பதால் இவர்கள் கைது செய்யப்பட்டார்கள் எனப் பொலிசார் தெரிவித்தனர். பம்பலப்பிட்டிப் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திட்டவர்களை யூலை 20 நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண சபை உடன்படிக்கையில் அரச சார்பிலும், விடுதலைப்புலிகள் சார்பிலும் கையொப்பம் இட்டவர்களையும், நிதியமைச்சின் செயலாளரையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆழிப்பேரலை நிவாரண சபை ஆவணத்திற்கும் பிரதிவாதிகள் கைச்சாத்திட்ட ஆவணத்திற்கும் இடையே வித்தியாசங்கள் இருப்பதாகவும், அதனால் கைச்சாத்திடப்பட்ட உண்மையான ஆவணத்தின் பிரதியை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்குமாறும் ஜே.வி.பி. மற்றும் தேசியபிக்கு முன்னணி என்பனவற்றின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.எம். சுமதிபால வேண்டுகோள் விடுத்தார்.

இவரது வேண்டுகோளை ஏற்ற கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதவான் எதிர்வரும் 20ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தின் பணிப்பாளருக்கும், நிதியமைச்சின் செயலாளருக்கும், சனாதிபதியின் செயலாளருக்கும் அழைப்பாணை விடுத்துள்ளார்.

ஜே.வி.பி.யும், தேசிய பிக்கு முன்னணியும் தனித்தனியாக நீதிமன்றத்தில் தொடுத்திருந்த மூன்று வழக்குகளிலும் முதலாவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் முதியன்சலாகே சுமனவீர ஜயசிங்கவின் சார்பில் சனாதிபதி சட்டத்தரணியொருவரும் ஐந்தாவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருக்கும் சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரலும் கடந்த வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.

நீதிமன்றத்தில் ஆஜராகாத விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகப்பிரதிப்பணிப்பாளர் சண்முகலிங்கம் ரஞ்சன், நிதியமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, சனாதிபதியின் செயலாளர் டபிள்யூ ஜே.எஸ். கருணாரத்ன ஆகியோருக்கே அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

தெரியாத அறியாத ஒரு தரப்பினருக்கு நிதியைக் கையாளும் அதிகாரத்தைக் கொடுக்கும் ஆழிப்பேரலை நிவாரண சபை உடன்படிக்கையினூடாக தெரிந்தே அரச நிதி சம்பந்தமான ஒழுங்கு விதிகள் மீறப்பட்டுள்ளதாகவும், அரசியலமைப்பிற்கு முரணாக கைச்சாத்திடப்பட்டுள்ள இந்த உடன்படிக்கையினூடாக மேற்கொள்ளப்படும் நிதிப் பரிமாற்றங்களுக்கு தடை விதிக்குமாறும் அந்த உடன்படிக்கையைச் செல்லுபடியற்றதாக்குமாறும் கோரி இந்த மூன்று வழக்குகளும் கடந்த வாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

# பொதுக்கட்டமைப்பில் தனித்தரப்பு கோரி கிழக்கில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

முற்பகல் அனைத்துப் முஸ்லிம் மாணவர் ஒன்றியமும் தென்கிழக்கு பல்கலைக்கழக முன்றலில் யூலை எழுச்சிப் பிரகடனமொன்றையும் இதுதொடர்பாக பிரகடனப்படுத்தியுள்ளனர்.

ஒலுவிலிலுள்ள தென்கிழக்கு பல்கலைக்கழக முன்றலில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டம் மற்றும் எழுச்சிப் பிரகடனத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்.

எத்தகைய ஆவணங்கள் என்றாலும் சரி கைச்சாத்திடும் போது அதில் முஸ்லிம்களின் தனித்தரப்பு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் இந்தப் பிரகடனத்தின் போது முன்வைக்கப்பட்டது.

இதேவேளை நேற்றுமுன்தினம் நண்பகல் மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் இது தொடர்பாக மற்றுமொரு ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

பள்ளிவாசல்களில் நண்பகல் ஜூம்மா தொழுகையை முடித்துக் கொண்ட முஸ்லிம்கள் அங்கிருந்து பிரதேச செயலகம் வரை இக்கோரிக்கை உட்பட எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து வாசக அட்டைகளை ஏந்தியவாறு பிரதேச பேரணியொன்றை நடத்தினர்.

பேரணி முடிவில் இது தொடர்பாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கான மனு பிரதேச செயலாளரிடமும் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கான மனு போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களிடமும் அங்கு வைத்து கையளிக்கப்பட்டது.

# சமையல் எரிவாயு விலையுயர்வு

(கொழும்பு)

சமையல் எரிவாயுவான ஷெல் சமையல் எரிவாயுவின் விலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பெரியளவில் அதிகரித்துள்ளது.

இந்த விலை அதிகரிப்பின் படி 12.5 கிலோகிராம் எடைகொண்ட ஷெல் சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை 94 ரூபாவாலும், 2.3 கிலோ கிராம் ஷெல் சமையல் எரிவாயுவின் விலை 183ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பிற்கு வெளியே விற்பனை செய்யப்படும் ஷெல் சமையல் எரிவாயுவுக்கான போக்குவரத்துக் கட்டணமும் வழமை போல் சேர்த்துக் கொள்ளப்படுமெனவும் ஷெல் காஸ் லங்கா நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (32)

# விலையுயர்வை ஆராய சனாதிபதி பணிப்பு

(கொழும்பு)


தற்பொழுது நாட்டில் அதிகரித்து வரும் விலைவாசிகளை குறைப்பதற்கு இரண்டு வாரங்களுக்குள் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கெபினட் அமைச்சர் குழுவிற்கு சனாதிபதி அறிவித்துள்ளார்.

இக் குழுவிற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமைதாங்குவார். கடந்த 29 ஆம் திகதி சனாதிபதி மாளிகையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்குழுவில் வாணிப அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டே புள்ளே, போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, அமைச்சர்நாவின், அமைச்சர் தினேஸ்குனவர்த்தனா அமைச்சர் சரத் அமுனுகம ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 08 - 04 - 1955



விண்ணில் 04 - 06 - 2005

அமரர்

### சிதம்பரப்பிள்ளை அருமைநாயகம் (அழகன்)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் விளங்கிய அன்புத்தந்தை அமரர் சிதம்பரப்பிள்ளை அருமை நாயகம் (அழகன்) அவர்களின் மீளாத்துயில் செய்திகேட்டு எமக்கு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தும் மரண கிரியைகளின் போது பல உதவிகளைப் புரிந்தும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு எம்ஆறாத் துயரில் பங்கெடுத்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை 04.07.2005 திங்கட்கிழமை அன்று நடைபெறும் 31 ஆம் நாள் நினைவு நிகழ்விலும் அதன் பின் நடைபெறும் மதியபோசன விருந்து பசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல:17,
ஆனந்தபுரம்,புதுக்குடியிருப்பு தகவல் குடும்பத்தினர்

(6181)

## தலதா மாளிகையின் புதிய தியவதன நிலமே தெரிவு

பௌத்தர்களின் புனித ஸ்தல மான கண்டி தலதா மாளிகைக்கான புதிய தியவதன நிலமேயாக [illegible]ங்க பிரதிப் தயால பண்டார என்பவர் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளார்.

இவர் தற்சமயம் கதிர்காமம், மற்றும் இரத்தினபுரி விகாரைகளில் பஸ்நாயக்கா நிலமேயாகக் கடமை யாற்றுபவராவார்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்தத் தேர்தலில் மொத்த 294 வாக்குகளில், தயால பண்டார 199 வாக்குகளைப் பெற்றார். அதேவேளை, முன்னாள் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரட் ணவிற்கு 44 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

இந்தமுறை தியவதன நிலமே தேர்தலில் ஆறு பேர் போட்டியிட்ட பொழுதிலும், இருவர் தேர்தலில் இருந்து வாபஸ் பெற்றிருந்தனர்.(32)


unicef

## Vacancy Notice UNICEF

**Post Title: project Assistant to monitor Cash Assistance to Government NGO Partners**

**Duty Station:** Kilinochchi

**Major duties:** under the supervision of the Head of Zone Office, assist in the area of finance and accounting control, specifically with regard to management of cash advances to goverment.

0 **Review and justify documentation submitted by Government and NGO's reconcile outstanding advances and assure compliance with rules, regulations and established budgetary limits.**

0 **Identify budget issues and discrepancies in documentation sent by partners**

0 **In collaboration with programme sections, monitor monthly outstanding cash advances.**

0 **provide training to Government and NGO partners**

| | |
|---|---|
| **Educational Qulifications:** | Five years of experience of which two (2) years of practical. work experience in finance and accounting. |
| **Languages** | Fluency in English and Tamil required |

Those who possess the required qualifications and wish to apply for the above post should submit their applications to the Head of Zone Office, 3 Kumarasamy Road, Ganesapuram, Kilinochchi before 8th of June.

Interviews Will be granted only to short-listed candidates.

Canvassing in any form will be a disqualification.

**UNICEF** is a non smoking working environment. Application form qulified women are encouraged.

(6316)



# இந்தியாவில் ஒரு ஆண்டு காலத்தில் 48 ஆயிரம் கோடி இலஞ்சம் பரிமாறப்பட்டது

இந்தியாவில் ஒரே ஆண்டில் 48 ஆயிரம் கோடி இலஞ்சமாக வழங்கப பட்டிருக்கிறது. இதில் பீகார்தான் மிகவும் மோசமான மாநிலம் என்று தெரிய வந்துள்ளது.

இந்தியா முழுவதும் இலஞ்சப் பணம் எவ்வளவு கைமாறுகிறது என்பதைக் கணக்கிட ஒரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.'டிரான்ஸ் பெரன்சி இன்டர்நேஷனல் இந்தியா' நிறுவனமும், 'மீடியா ஸ்டடீஸ் சென்டர்' நிறுவனமும் இணைந்து இந்தக் கருத்துக்கணிப்பை நடத்தின.

20 மாநிலங்களைச் சேர்ந்த 151 நகரங்களிலும், 306 கிராமங்களிலும் இந்தக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. 14,405 பேர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இலஞ்சம் குறைவாக வாங்கிய மாநிலம் கேரளாதான். அதற்கு அடுத்தபடியாக இமாச்சல பிரதேசம்(02), குஜராத்(03), ஆந்திரா(04), மராட்டியம்(05) ஆகிய மாநிலங்களில் குறைவாக இலஞ்சம் கைமாறியுள்ளது.

இலஞ்சம் மிகவும் அதிகமாக வாங்கப்பட்ட மாநிலம் பீகார் அங்கு எதற்கெடுத் தாலும் இலஞ்சம் என்ற நிலையுள் ளது. இலஞ்சப்பட்டியலில் தமிழ்நாட் டுக்கு 12 ஆவது இடம்.

சத்தீஷ்கார் (06) பஞ்சாப்(07), மேற்கு வங்காளம் (08), ஒரிசா(09), உத்தரப்பிரதேசம் (10) ஆகிய மாநிலங்களில் ஓரளவு லஞ்சம் வாங்கப்படுகிறது.

டில்லி(11), அரியானா (13), ஜார்க்கண்ட்(14), அசாம் (15), ராஜஸ்தான் (16), கர்நாடகம் (17), மத்தியப்பிரதேசம் (18), ஜம்முகாஷ்மீர் (!9) ஆகிய மாநிலங்களில் அதிகளவு இலஞ்சம் கைமாறியுள்ளது.

பொலிஸ் துறையில் தான் அதிகளவு இலஞ்சம் வாங்கப்படுகிறது. அதுவும் அசாம் பொலிஸ்தான், மிகவும் மோசம் என்றுதெரிய வந்துள்ளது.

# இந்திய சி.பி.ஐ.இன் அதிரடிசோதனையில் முறைகேடாகத் திரட்டிய வருமானங்கள் பறிமுதல்

தமிழக சென்னை சுங்க அதிகாரி வீடு உட்பட 183 இடங்களில் சி.பி.ஐ நடத்திய அதிரடிச்சோதனையில் ரூபா 20 கோடி பெறுமதியான ஆவணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சமீப காலமாக அரசு அதிகாரிகள் வீட்டில் சி.பி.ஐ சோதனை நடத்தி பல கோடி மதிப்புள்ள சொத்துக்களைக் கைப்பற்றி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

பல அதிகாரிகள் வருவாய்க்கு அதிகமாக பல கோடிக்குச் சொத்துச் சேர்த்து இருப்பது அம்பலமாகி வருகிறது.பொதுமக்களின் வருமானத்தைக் கண்காணித்து வரி வசூலிக்க வேண்டிய துறை அதிகாரிகள், கடத்தல் போன்றவற்றைக் கண்டுபிடிக்க வேண்டிய அதிகாரிகளே தவறான முறையில் நடப்பதுடன், குற்றவாளிகளுக்குப்பாதுகாப்பாகச் செயற்பட்டு பணம் சம்பாதிக்கிறார்கள்.

கடந்தசில மாதங்களுக்கு முன்பு சென்னையில் எல்.ஐ.சி மற்றும் வங்கி அதிகாரிகள் வீடுகளில் சோதனை நடத்தப்பட்டது. இந்த நிலையில் திடீரென கடந்த வியாழன் இந்தியா முழுவதும் துறைமுகம், சுங்கம், கலால், எல்.ஐ.சி போன்ற மத்திய அரசு அதிகாரிகள் வீடுகள் மற்றும் அலுவலகங்கள் என 183 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது.

கடந்தவியாழன் காலை 6.30 மணிக்கே இந்த அதிரடி சோதனை தொடங்கியது. அதிகாரிகளின் சொத்து விபரங்கள், வங்கி கணக்கு, உறவினர் பெயர்களில் உள்ள சொத்து விபரங்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டது.

சென்னையில் சுங்க அதிகாரி அஜய்குமார் குப்தா, அளவுக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்ததாக எழுந்த புகாரை அடுத்து அண்ணா நகர் ஐந்தாவது தெருவில் உள்ள அவரது வீடு மற்றும் பேசன்ட் நகரிலுள்ள அவரது அலுவலகம் உட்பட மூன்று இடங்களில் சோதனை நடந்தது.

அப்போது அவரது வீட்டில் இருந்து பல இலட்சம் ரொக்கம். நகை மற்றும் சொத்து ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் கூறினார்கள். இந்தியா முழுவதும் 183 இடங்களில் நடந்த சோதனைகளில் மொத்தம் ரூபா 16 இலட்சம் ரொக்கம் ரூபா20 கோடிக்கு மேல் சொத்து ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக சி.பி.ஐ வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த அதிரடி சோதனையை அடுத்து ஏனைய ஊழல் அரசு அதிகாரிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

# அ.தி.மு.க நிர்வாகிகள் மாற்றம்

அ.தி.மு.க நிர்வாகிகள் பலர் அதிரடியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தமிழக முதல் மந்திரி ஜெயலலிதா வருகிற சட்டமன்றத்தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்று பல்வேறு திட்டங்களை மக்களுக்குச் சலுகை அளிப்பதுபோல் காட்டி வந்தார். மாணவிகளுக்கு இலவச சைக்கிள் முதல் பல்வேறு திட்டங்களை அறிவித்து வருகிறார். ஜூலை மாதம் முதல் கட்சி ரீதியாக கவனத்தைச்செலுத்தி பல்வேறு மாற்றங்களைச் செய்ய முடிவு செய்திருந்தார். அதன்படி தென்சென்னை, திருவண்ணாமலை,ராமநாதபுரம், வேலூர் கிழக்கு, காஞ்சிபுரம் கிழக்கு போன்ற மாவட்டங்களில் பல்வேறு நிர்வாகிகளை மாற்றப்பட்டுள்ளனர்.

NEW SCIENCE HALL
யாழ்.நகர்
A/L DAY CLASS
துரித மீட்டல் வினாவிடை வகுப்பு
கணித விஞ்ஞானப் பிரிவு
திங்கள் முதல் வெள்ளிவரை

| | |
|---|---|
| PHYSICS<br>திரு.குகன் | CHEMISTRY<br>திரு.சிவத்திரன் |
| COM.MATHS<br>திரு.செந்தில்ராஜ் | BIOLOGY<br>வழமையான ஆசிரியர்.<br>திரு. கெங்காதரன் |

(சி.12247)
ஆரம்பம்:- 10.07.2005
ஞாயிறு காலை 8.00 மணி

நாளை ஆரம்பமாகின்றது
வெண்புறா
WHITE PIGEON
கண்ணிவெடி நடவடிக்கை வாரம்-2005
யூலை 04-10 திகதிகளில் வன்னி பெருநிலப்பரப்பெங்கும் நடைபெறுகின்றது.
அனுசரணையாளர்கள்
கண்ணிவெடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும்
(சி.12302)
விழிப்புடன் இருப்போம் விபத்தினைத் தடுப்போம்

# கங்கை அமரன் கிண்ணத்தை கைப்பற்றியது கிறீன் வீல்ட்




கிறீன்வீல்ட் அணிவீரர்கள் — பனங்கட்டிக் கொட்டுசென் ஜோசெப்அணிவீரர்கள்

தமிழீழ விளையாட்டுத்துறையின் மன்னார் மாவட்ட பிரிவினரும், கால்பந்தாட்ட சங்கத்தினரும் இணைந்து நடாத்திய கடற்புலிகளின் தளபதி லெப்.கேணல் கங்கை அமரன் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த 25ஆம்திகதிமுதல் 29ஆம்திகதி வரை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இக் கால்பந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி,வவுனியா, மன்னார் மாவட்டங்களிலிருந்து 30 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

இறுதிப் போட்டிக்கு மன்னார் கிறீன்வீல்ட் விளையாட்டுக்கழகமும், மன்னார் சென்ஜோசெப் விளையாட்டுக்கழகமும் தெரிவு செய்யப்பட்டு கிறீன்வீல்ட் விளையாட்டுக்கழகம் தண்ட உதைமூலம் 3-2 என்றகோல் ரீதியில் வெற்றிபெற்று கங்கை அமரன் வெற்றிக் கிண்ணத்தினை சுவீகரித்துக்கொண்டது.

இறுதிநாள் பரிசளிப்பு நிகழ்வில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற விளையாட்டுக்கழகங்களுக்கான வெற்றிக் கிண்ணமும், பணப்பரிசும் வழங்கப்பட்டது. இப்போட்டியானது முதன் முதலாக மின்னொளியில் அரையிறுதியும் இறுதிப் போட்டியும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (சோ)





அமெரிக்காவில் எட்டாவது ஆண்டாக கடந்த மாதம் 25ஆம் திகதி தமிழர் தேசிய விளையாட்டு விழா நடைபெற்றது.

அமெரிக்க உலகத் தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் இந்த விழா நடத்தப்பட்டது. தமிழீழ மற்றும் அமெரிக்க தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு ஈழப்போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும், மரணித்த எம் உறவுகளுக்கும் மௌவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இவ்விளையாட்டு விழாவில், நியூயோர்க், நியூயேர்சி மற்றும் கனற் றிக்கற் மாநிலங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட இளையோர்கள் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

பங்குபற்றிய அனைத்து வீரர்களுக்கும் சான்றிதழ்களும் வெற்றிபெற்றவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

## குமா சிறுவர் பூங்கா சிறார்களின் மெய்வன்மை திறனாய்வுப் போட்டி



கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் அமையப்பெற்றுள்ள குமா சிறுவர்பூங்காச் சிறார்களின் மெய்வன்மைத் திறனாய்வு விளையாட்டுவிழா நிகழ்வு ஒன்று கடந்த 28ஆம்திகதி இடம்பெற்றுள்ளது.

அன்று பிற்பகல் 2.30 மணியளவில் குமா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம் பெற்ற இந்த சிறார்களின் மெய்வன்மைத் திறனாய்வு விளையாட்டுவிழா நிகழ்வு போசாக்குப் பூங்காவின் நிர்வாகி திரு.பிரான்சிஸ் தலைமையில் மங்கல விளக்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து தேசியக்கொடி, தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடி, முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையக் கொடிகள் என்பன ஏற்றிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆசியுரையினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் வழங்கியிருந்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதிப்பங்களிப்புடன்கூடிய அனுசரணையின்கீழ் ஊரக மேம்பாட்டுப் பணியினரால் பராமரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டுவரும் சிறுவர் பூங்காக்களில் ஒன்றாக விளங்கும் குமா சிறுவர் பூங்காச் சிறார்களின் மெய்வன்மைத் திறனாய்வு விளையாட்டு விழா நிகழ்வு ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு சிறார்களின் உறுதியுரையுடன் சிறார்களுக்கான 50 மீற்றர் தூர ஓட்டப்போட்டி இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பல தரப்பட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

போர்சூழல்களாலும், சமூகப் பொருளாதார ரீதியாகவும் மிகவும் பின்தங்கிய நிலைகளிலுள்ள கிராமங்களைத் தேர்ந்தெடுத்து ஊரக மேம்பாட்டுப் பணியினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டச் செயற்பாடுகளில் ஒன்றாகவே இந்த குமா சிறுவர் போசாக்குப் பூங்காவும் நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும். (கு)

## கரும்புலிகள் நாளை முன்னிட்டு சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டி

கரும்புலிகள் நாளை முன்னிட்டு புதுக்குடியிருப்பு அரசியல்துறையும், தேசிய எழுச்சிப் பேரவையும் ஒன்றிணைந்து முல்லை. மாவட்ட விளையாட்டுத்துறையினரால் நடாத்தப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான மாபெரும் மரதனோட்டப் போட்டி நேற்று முன்தினம் காலை 6.10 மணிக்கு ஆண்களுக்கான மரதனோட்ட ஆரம்பம் வட்டுவாகலிலும், பெண்களுக்கான மரதனோட்ட ஆரம்பம் முள்ளிவாய்க்கால் சந்தியிலும் ஆரம்பமானது. இப்போட்டிகளை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் ஆரம்பித்து வைத்தார்கள். இம்மரதனோட்டத்தில் முதலாம் இடத்தை இ. தவரூபியும், இரண்டாம் இடத்தை இ. உதயரூபியும், மூன்றாம் இடத்தை பா. உதயகுமாரி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

ஆண்களுக்கான மரதனோட்டப் போட்டியில் முதலாம் இடத்தை மு. கிராமகிருஸ்ணன், இரண்டாம் இடத்தை க. மயூரன், மூன்றாம் இடத்தை க. நிசாந்தன் ஆகியோர் வெற்றி வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (20.08)

## நடுவராகப் பணியாற்ற அழைப்பு டேவிட் ஷெப்பேட் மறுப்பு



இங்கிலாந்தில் இம்மாதம் ஆரம்பமாகவுள்ள இங்கிலாந்து- அவுஸ்திரேலிய அணிகள் பங்குபற்றும் ஆஷஸ் கிண்ண கிரிக்கெட் டெஸ்டில் நடுவராகப் பணியாற்றுமாறு சர்வதேச கிரிக்கெட் சபை விடுத்த அழைப்பை புகழ் பெற்ற நடுவரும் சென்ற மாதம் தனது ஓய்வை அறிவித்தவருமான டேவிட் ஷெப்பேட் மறுத்துள்ளார். இந்தத் தொடரில் தன்னை நடுவராக நியமிக்க தயாரிப்புக்கள் தடல்புடலாக இருந்த போதும் தான் அமைதியாக ஓய்வெடுக்கப் போவதாக ஷெப்பேட் தெரிவித்துள்ளார்.

92டெஸ்ட் போட்டிகளுக்கும், மூன்று உலகக் கிண்ண இறுதிப்போட்டி உட்பட நூற்றுக்கு மேற்பட்ட ஒருநாள் போட்டிகளில் நடுவராகப் பணியாற்றிய அவரின் இறுதி ஒருநாள் போட்டியாக வரும் செப்ரெம்பரில் நடைபெறும் கிளமோகன், கிளசஸ்டசயர் அணிக்குமிடையில் நடைபெறும் ஒருநாள் கவுண்டிப் போட்டி அமையும்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

வட்டக்கச்சி சில்வா வீதி தூயமணி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நிகழ்வு கரைச்சிப் பிரதேச சபையின் அனுசரணையுடன் கடந்த புதன் மாலை இரண்டு மணியளவில் தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பித்தது.

சிறார்களின் ஓட்டம், தாரா நடை, நண்டோட்டம், தவளைப்பாய்ச்சல், நீர் நிரப்புதல், இலக்கங்களை உருவாக்குதல், ஒத்த சொல் தெரிவு செய்தல், வினோத உடை போன்ற நிகழ்வுகளுடன் வெற்றிபெற்ற சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டு நன்றி உரையுடன் நிகழ்வுகள் யாவும் நிறைவு பெற்றன. (12)

*

றொசான் முன்பள்ளி திறனாய்வு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி உதயநகர் கிழக்கு முன்பள்ளி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அதேபோன்று குஞ்சுப் பரந்தன் கானகன் திறனாய்வு விழா நாளை பிற்பகல் 2.00 மணிக்கு கானகன் முன்பள்ளி விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள்ளது. அனைவரையும் கலந்து சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகளைக் கண்டு கழிக்கும் வண்ணம் முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிறுவனத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)




## சிறிலங்காவில் நடைபெறும் முக்கோணப் போட்டி அனுபவமற்ற மேற்கிந்தியதீவு அணி அறிவிப்பு



சிறிலங்காவில் இம்மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சிறிலங்கா-மேற்கிந்தியதீவுகள் அணிகளுக்கிடையிலான இரு கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளுக்கும் அதனைத் தொடர்ந்து இந்தியாவும் பங்குகொள்ளும் முக்கோண ஒருநாள் போட்டிகளுக்குமான மேற்கிந்தியத் தீவுகள் அணியை அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.


இவ்வணியில் சிங்நாராயன் சந்தர்போல் (தலைவர்), வேகப்பந்து வீச்சாளர் டரன் பவல், புதிய விக்கெட் காப்பாளரான தினேஷ் நம்டின் ஆகிய மூவரைத் தவிர ஏனைய பத்து வீரர்களும் டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்ற அனுபவம் குறைந்தவர்களாவர். அத்துடன் தற்போது சிறிலங்கா ஏ அணியுடன் ஆடிவரும் மேற்கிந்தியத் தீவு ஏ அணியைச் சேர்ந்தவர்களுமாவர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் அனுபவமிக்க வீரர்களான பிரைன்லாறா, ராம் நரேஸ், சர்வான், கிறிஸ்கெய்ல், கிறிஸ் கேயான்ஸ் போன்றோர் கிரிக்கெட் சபையுடன் ஒப்பந்தத் தகராறு காரணமாக பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

எனினும் லாறா போன்ற வீரர்கள் பங்குபற்றாத போட்டி என்பதால் நுழைவுச்சீட்டு விற்பனையில் வீழ்ச்சியடையும் என்றும் தொலைக்காட்சி வருமானமும் கிடைக்காது விடும் என்ற அச்சம் தோன்றியிருப்பதாக சிறிலங்காவின் கிரிக்கெட் சபை அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.



உலக கரப்பந்து தகுதிச் சுற்று போட்டிகள் சென்னையில் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த போட்டியில் அவுஸ்திரேலியா - கொரிய அணிகள் மோதின. கொரிய வீரர் அடிக்கும் பந்தைத் தடுக்க முற்படும் அவுஸ்திரேலிய வீரர்கள் இதில் கொரியா வெற்றிப் பெற்றது.



சிந்தனைக்கு

நாம் அரசியல் வாதிகளல்லர்;
நாம் புரட்சி வாதிகள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 03-07-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## அரசிற்கு எடுத்துரைப்பு

விடுதலைப்புலிகளுடன் கடந்த வியாழக்கிழமை பேச்சு வார்த்தைகளை நடத்திய போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹொக்லண்ட் நேற்று முன்தினம் அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜெயந்ததனபாலவைச் சந்தித்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்த விபரங்களைத் தெரிவித்தார். அத்தோடு போராளிகள், பொறுப்பாளர்களின் போக்குவரத்துத் தொடர்பாக விடுதலைப்புலிகள் விதித்துள்ள காலக்கெடு தொடர்பான விடயத்தையும் விளக்கிக் கூறியுள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தரப்புத் தகவலின்படி அரசாங்கத்திற்கு இவ்விகாரம் தெளிவாக விளக்கிக்கூறப்பட்டுள்ளது என்றே கொள்ள முடியும். அத்தோடு இவ்விவகாரத்திற்குத் தீர்வு காணாதுவிட்டால் ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்தும் கண்காணிப்புக்குழுத் தரப்பில் விளக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

விடுதலைப்புலிகள் தொடர்பான விடயத்தை கையாள்வதில் சிறிலங்கா ஆட்சியாளரும் சரி, வேறெவராகிலும் சரி அலட்சியப் போக்கை கடைப்பிடித்தல் என்பது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தக் கூடியதாகும். ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கம் எந்த விடயத்திலும் உறுதியான நிலைப்பாட்டையே எப்பொழுதும் மேற்கொள்வது உண்டு.

விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு அரசியல் கட்சியல்ல. அதில் உள்ளவர்கள் அரசியல்வாதிகளும் அல்ல. ஆகையினால் விடுதலைப்புலிகள் சிறிலங்காவிலுள்ள அரசியல்வாதிகள் போன்று நேரத்துக்கு ஒன்று பேசுபவர்கள் அல்ல. சந்தர்ப்பவாத அரசியல் நடத்துபவர்களும் அல்ல.

ஆகையினால் விடுதலைப்புலிகள் இயக்கம் தெரிவிக்கும் கருத்துகள், வெளிப்படுத்தும் உணர்வுகள் அசட்டை செய்யப்படுவதோ புறந்தள்ளப்படுவதோ பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தக் கூடியதாகும். இதற்கு கடந்தகால அனுபவங்களே சுட்டிக்காட்டத் தக்கவை.

இந்தியா–சிறிலங்கா சமாதான உடன்பாடு கைச்சாத்தாகி இந்திய இராணுவம் வடக்கு–கிழக்கில் நிலைகொண்டிருந்த போது இரண்டு சம்பவங்கள் நடந்தன. முதல்நிகழ்வு தியாகி லெப்.கேணல் திலீபனின் உண்ணாவிரதமாகும். தனது கோரிக்கைகள் நிறைவேற்றப் படாவிட்டால் உண்ணாவிரதம் இருந்து உயிர்துறப்பேன் என்று திலீபன் அறிவித்ததை இந்திய அரசு பொருட்படுத்தவில்லை. இந்திய அரசியல்வாதிகள் போன்றுபுலிகளும் அச்சுறுத்தலுடன் நின்றுவிடுவார்கள் என்றே இந்தியா மதிப்பிட்டது. விளைவு திலீபன் உயிர்துறக்க வேண்டியதாகியது.

அடுத்த நிகழ்வு லெப்.கேணல் புலேந்திரன், லெப்.கேணல் குமரப்பா உட்பட பன்னிரண்டு போராளிகள் சிறிலங்காஇராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு பலாலியில் வைக்கப்பட்டிருந்தபோது அவர்களை கொழும்பு கொண்டு செல்ல சிறிலங்கா இராணுவத்தால் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அவ்வேளையில் அத்தகையதொரு முயற்சி நிறுத்தப்படாது விட்டால் போராளிகள் தற்கொலை செய்துகொள்ள நேரிடும் என எச்சரிக்கப்பட்டது. ஆயினும் சிறிலங்கா அரசாங்கமும் இந்திய அரசும் அதன் இராணுவமும் பொருட்படுத்தவில்லை. விளைவு அப்போராளிகள் வீரச்சாவைத் தழுவவேண்டியதாயிற்று.

அடுத்ததாக 1995 இல் சந்திரிகா தலைமையிலான பொ.ஐ முன்னணி அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த யுத்தநிறுத்தம் முடிவுக்கு வந்ததை சுட்டிக்காட்ட முடியும். புலிகளுடன் சந்திப்புக்களை நடாத்தி அத்தியாவசியப்பொருட்கள் மீதான தடைநீக்கம், எரிபொருள் மீதான தடைநீக்கம். மீன்பிடித்தடைநீக்கம் போன்றவற்றிற்கு இணக்கம் தெரிவித்த அரசாங்கம் பின்னர் அவற்றை நிறைவேற்றாது இழுத்தடித்தது.

இந் நிலையில் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களினால் உடன்பாடுகளை நிறைவேற்றுவதற்கான காலக்கெடு விதிக்கப்பட்டது. பின்னர் சனாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்க காலக்கெடு சிறிது காலம் பின்தள்ளப்பட்டது. ஆனால் சானாதிபதி சந்திரிகா அதனைப் பொருட்படுத்தவில்லை. இந் நிலையில் விடுதலைப்புலிகள் தாம் ஏற்கனவே அறிவுப்புச்செய்த காலக்கெடுவுடன் யுத்தநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

சனாதிபதி சந்திரிகாவோ அன்று பெரும் கூச்சல் போட்டார். விடுதலைப்புலிகள் முன் அறிவித்தல் இன்றி யுத்த நிறுத்தத்தை முறித்துவிட்டனர் எனக் குற்றம் சாட்டினார். அவரின் வெளியுறவுத் துறை அமைச்சர் சர்வதேச ரீதியில் பெரும் எடுப்பில் பிரச்சாரத்தை மேற்கொண்டார். அவர் கொழும்பில் தங்குவதே அபூர்வமானதாக இருந்தது.

ஆனால் இவ்வாறு அரசு கூச்சல் போட்டது சர்வதேசத்தின் ஆதரவைத்திரட்டுவதற்காகவே ஒளிய வேறொன்றும் இல்லை. ஏனெனில் விடுதலைப்புலிகள் ஏற்கனவே காலக்கெடுவை தெளிவாக அறிவித்திருந்தனர். அதைக்கருத்தில் கொள்ளாது விட்டுவிட்டு புலிகளின் செயல் யுத்தநிறுத்தத்திற்கு மாறானதென குற்றம் சாட்டுவது தவறாகும். சந்திரிகா அரசாங்கத்தின் இறுமாப்பும் அசண்டையீனமுமே மூன்றாம் கட்ட ஈழப்போருக்கு காரணமாகும்.

ஆகையினால் விடுதலைப்புலிகளின் எச்சரிக்கையைப் புறந்தள்ளிவிட்டு பின்னர் துரோகம் செய்து விட்டனர் எனக் கூறுவதும் யுத்தநிறுத்தத்தை மீறிவிட்டனர் எனக்கூறுவதும் அர்த்தமற்றதொன்றாகும்.

# எந்தத் தேர்தலையும் சந்திக்கத் தயார்; எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் எந்தவொரு தேர்தலையும் சந்திக்க தமது கட்சி தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசை ஆதரித்து வரும் ரணிலின் இந்த அறிவிப்பு கொழும்பில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்காவின் தென்கோடி முனையான தெவிந்தரவில் மக்கள் எழுச்சிப் பேரணியைத் தொடங்கிய ரணில் சர்வதேச ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை உடனே நடத்த வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர். இருந்த போதும் அரசு விரும்பினால் பாராளுமன்றத் தேர்தலையும் நடத்தலாம். எந்தத் தேர்தலையும் எதிர் கொள்ள எமது கட்சி தயாராக இருக்கிறது என்றார்.

அமைதிப் பேச்சுக்களை சிறிலங்கா அரசு முடக்கியதால் அது போருக்கு இட்டுச்செல்லப் போகின்றது என்றும் ரணில் எச்சரித்தார்.

இந்த அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது திணறுகிறது. வேலை வாயப்புக் கொடுப்பதாகக் கூறியது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் அதில் இருந்து மீளமுடியாது உள்ளனர். விலைவாசி அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. மக்கள் பொருளாதார சுமையைத் தாங்கமுடியாது உள்ளனர். அதனால் அரசாங்கம் ஆட்சிசெய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது என ரணில்விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

# புலிகளிடம் படையணிகள் இல்லாதபோதே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியுமாம்

## - கதிர்காமரின் புதிய கண்டுபிடிப்பு

(கொழும்பு)

படையணிகள் ஏதுமற்ற நிலையில் ஒரு பொதுமக்கள் அமைப்பாக விடுதலைப் புலிகள் மாறும் வரை இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்று சிறிலங்காவின் வெளியுறுவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

ஆங்கில நாளேடு ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இராணுவ அமைப்பைக் கலைத்து விட்டு ஆயுதங்களை ஒப்படைப்பது என்பதே தாம் குறிப்பிடும் சனநாயகம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழர் பிரதேசங்களில் சனநாயக நடைமுறைகளைக் கொண்டுவர முடியாவிடின் அல்லது நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் நோர்வே அனுசரணையாளர்கள் இலங்கையை விட்டு வெளியேற வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார். (32)

# எழிலனை சந்திக்க வந்தவர்கள் சிறிலங்கா படையினரால் வழிமறிப்பு

(திருகோணமலை)

திருகோணமலைமாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலனை சந்திக்கச் சென்ற சேருவாவில் பகுதியைச் சேர்ந்த பத்து கிராமத் தலைவர் களையும் நிலாப்பொல வஜிதா தேரரையும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. இச்சந்திப்பு நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு நடைபெறவிருந்தது.

திருகோணமலை சகவாழ்வு மன்றம் இச்சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. சுமார் 20 நிமிடங்கள் வரை இவர்கள் தொடர்ந்து செல்லவிடாது கட்டைபறிச்சான் இராணுவச் சோதனை நிலையத்தில் தடுக்கப்பட்டிருந்தனர்.

புலிகளின் பகுதிக்குச் செல்வதால் உங்களுக்கு ஆபத்து வரலாம் ஏன் சென்று ஆபத்தை விலைக்கு வாங்குகின்றீர்கள் போன்ற கேள்விகளையும் இராணுவத்தினர் எழுப்பினர்.

சேருவில பிரதேசத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட சிக்கலான நிலைமைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே நாங்கள் செல்கின்றோம்.

இதுபற்றி யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும். அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தும் அவர்கள் செல்வதற்கு இடமளிக்கவில்லை.

இருபது நிமிடங்களின் பின்னரே தொடர்ந்து செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.தாமதம் காரணமாக காலை 10.00 மணிக்கு நடைபெறவிருந்த சந்திப்பு 10.30 மணிக்குப் பின்னரே நடைபெற்றது. (32) .

# அரசாங்கத்திற்கு "வங்குரோத்து" நிலை; ஆட்சியை விட்டுச்செல்வதே சிறந்ததாம்!

சந்திரிகா அரசாங்கம் மிகவும் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. அதனால் ஆட்சியை விட்டுச் செல்வதே சிறந்தது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்கா தெரிவித்துள்ளார். ஐக்கியதேசியக் கட்சித் தலைவருக்கு எதிராக ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் அரசாங்கத்தின் மிக கீழ்த்தரமான வேலைகள். இந்த சுவரொட்டிகளை அரச அமைச்சரான மங்கள சமர வீரவே முன்னின்று அச்சிட்டு ஒட்டுவதற்கு காரணமாகியுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்திய- சிறிலங்கா உடன்படிக்கைக்கு திராவிடர் கழகம் எதிர்ப்பு

(சென்னை)

இந்திய - சிறிலங்கா இராணுவ ஒப்பந்தத்திற்கு திராவிடர் கழகம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. சென்னையில் நடைபெற்ற திராவிடர் கழகத்தின் செயற்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.இலங்கை அரசுடன் இந்திய அரசு இராணுவ ஒப்பந்தம் செய்வது தமிழர்களின் உரிமைகளுக்கு விரோதமான ஒன்று என்பதால் அந்த ஒப்பந்தத்தை திரும்பப் பெற வேண்டும் என்று அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (32)

# பாடசாலைகளிலிருந்து படையினரை வெளியேறக்கோரி யாழ்.இல் மாணவர்கள் தொடர்போராட்ட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பாடசாலைகளில் நிலை கொண்டுள்ள படையினரை வெளியேறக்கோரி மாணவர்களால் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் முன்னெடுத்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் யாழ்.மாவட்டத்தில் பெருமளவு பாடசாலைகளைப் படையினர் ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ளனர்.

இப்பாடசாலைகளில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் எனக்கோரி முதற்கட்டமாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் அதற்கு சரியான பதில் கிடைக்காத நிலையில் தொடர் போராட்டங்களை தாம் முன்னெடுக்கவுள்ளதாகவும் யாழ். மாவட்ட தமிழ் மாணவ ஒன்றியம் தெரிவித்தது.

(32)

# சேதுசமுத்திர கால்வாய் திட்டம்;

# இந்தியப் பிரதமர் நேற்று ஆரம்பித்தார்




(சென்னை)

சேதுசமுத்திர கால்வாய் திட்டத்தினை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

மதுரையில் நடைபெற்ற இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மன்மோகன்சிங், சோனியா காந்தி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி உட்பட பல அரசியல் பிரமுகர்கள் வருகை தந்திருந்தனர்.

இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் வகையில் பொத்தான் ஒன்றை பிரதமர் மன்மோகன்சிங் அழுத்தியதும் நாகபட்டினம் அருகே கோடிக்கரை கடல் பகுதியில் கால்வாய் வெட்டும் பணி ஆரம்பமாகிறது.

இந்தக் காட்சி மதுரை விழா மேடையில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இதில் கலந்துகொள்ளவில்லை. (32)

## அமெ.யில் தமிழீழ தேசியக்கொடியேற்றப்பட்டு தமிழர் தேசிய விளையாட்டு விழா நிகழ்வு

அமெரிக்காவில் தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் தமிழர் தேசிய விளையாட்டு விழா இடம் பெற்றுள்ளது.

அமெரிக்காவில் எட்டாவது ஆண்டாக கடந்த மாதம் 25 ஆம் திகதி தமிழர் தேசிய விளையாட்டு விழா நடைபெற்றது.

அமெரிக்க உலகத்தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் இந்த விழா நடத்தப்பட்டது.

தமிழீழ மற்றும் அமெரிக்க தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு, ஈழப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும், மரணித்த உறவுகளுக்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இவ்விளையாட்டு விழாவில் நியூயோர்க், நியூயேர்சி மற்றும் கனற்றிக்கற் மாநிலங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட இளையோர்கள் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

பங்குபற்றிய அனைத்து வீரர்களுக்கும் சான்றிதழ்களும், வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

## திருமலை சம்பவங்கள் குறித்து புத்தபிக்குகள் புலிகளிடம் மன்னிப்பு

(திருமலை)

சர்ச்சைக்குரிய புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக திருமலை மாவட்டத்தில் தமிழ்மக்களை புண்படுத்தும் படியாக நடந்து கொண்ட சம்பவங்கள் குறித்து சேருவில பௌத்தபிக்கு தலைமையிலான குழுவினர் விடுதலைப்புலிகளிடம் மன்னிப்புக் கோரியுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படாவண்ணம் ஐக்கியத்தை ஏற்படுத்தப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சகவாழ்வு மன்றத்தின் ஏற்பாட்டில் பௌத்த பிக்குவான கறந்தகுல ராஜசேன மற்றும் சிங்கள பிரதிநிதிகள் சிலரும் சென்று திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் அவர்களைச் சந்தித்து இந்தவிடயத்தை தெரியப் படுத்தினர். கட்டைபறிச்சானில் இச் சந்திப்பு நடைபெற்றது.

## பாலியல்வல்லுறவு முயற்சி; சிப்பாய் மடக்கிப்பிடிக்கப்பட்டார்

(வவுனியா)

வவுனியா மதகுவைத்த குளம் பகுதியில் வீடு ஒன்றினுள் புகுந்து பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்த இராணுவச் சிப்பாய் ஒருவர் அப்பகுதி பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில், நேற்றுமாலை குறிப்பிட்ட இராணுவச் சிப்பாய் அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்து அங்கிருந்த பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்துள்ளார்.

இதனை அடுத்து அச்சிப்பாயினை மடக்கிப் பிடித்த பொதுமக்கள் அவரை இராணுவத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

(21)

## ஐ.தே.க.வின் மக்கள் சக்தி பேரணி நேற்று ஆரம்பம்; பல்லாயிரம் பேர் பங்கேற்பு!

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை உடனே நடத்த வேண்டும். முடங்கிக் கிடக்கும் அமைதிப் பேச்சுக்களை மீளத் தொடங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் சிறிலங்காவின் நேற்று தென்கோடி முனையிலிருந்து கொழும்பு நோக்கி மக்கள் சக்தி பேரணியை தொடங்கி வைத்தார்.

மாத்தறை பிரதேசம் தெவிந்துர என்னும் இடத்தில் உள்ள விஷ்ணு ஆலயத்தின் முன்பாக ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இப்பேரணி காலை 8.00 மணிக்கு புறப்பட்டது. பல்லாயிரக்கணக்கான ஐ.தே.க. தொண்டர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

சுமார் 160 கி.மீற்றர் தூரம் நடத்தப்படும் இப்பேரணி எதிர்வரும் 12 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெற்று கொழும்பை வந்தடையும். கொழும்பில் மூன்று இடங்களில் ஒன்று கூடும் மக்கள் பேரணி இறுதியாக லிப்டன் சுற்றுவட்டத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்த உள்ளது.

பேரணி வரும் பிரதேசங்களில் பொதுக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியினர் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

2003 ஆம் ஆண்டு ஜே.வி.பியினர் தெற்கில் இருந்து கொழும்புக்கு நடத்திய பேரணியை விட இதில் அதிகளவு மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

### கெடுபிடி....

வீதியால் பிரயாணம் செய்யும் மக்களை அச்சுறுத்தி கடும் உடல் சோதனைகளுக்குட்படுத்தி வருவதால் பிரயாணிகள் மிகவும் அச்சங்களுக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இரவு வேளைகளில் அவசரமாக பிரயாணங்களை மேற்கொள்பவர்களை இடை நிறுத்தி தகாத வார்த்தைகளால் பேசி அவர்களது பிரயாணங்களுக்கு இடையூறு விளைவித்து வருவதாகப் பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

வீதியால் மிகவும் வாகன நெரிசல் போக்குவரத்தின் போது உந்துருளிகள் மற்றும் ஏனைய வாகனங்களை திடீரென வழிமறிப்பதால் வீதி விபத்துக்களும் அதிகரிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### மின்பாய்ச்சப்பட்ட

தர்மன் ராஜா (வயது-21) என்ற இளைஞர் சிறிலங்காப் படையினரால் அமைக்கப்பட்டுள்ள மின்பாய்ச்சப்பட்ட முட்கம்பியில் சிக்கி மின்தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வழமையாக இப்பகுதி ஊடாகவே மீனவர்கள் மீன்பிடித்தலுக்குச் செல்வதாகவும், இவ்வளவு காலமும் இவ்வாறு முட்கம்பிக்கு மின் பாய்ச்சப்படவில்லை என்றும் மீனவர்களைக் கொல்லும் நோக்குடனேயே சிறிலங்காக் கடற்படையினரால் மின் பாய்ச்சப்பட்டதாக மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து மீனவர்களுக்கும், சிறிலங்காக் கடற்படையினருக்கும் இடையில் முறுகல் நிலை வலுப்பெற்றுள்ளது.

ஏற்கனவே, கடந்த மாதம் கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் வைத்து குருநகர் இளைஞர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக குருநகர்ப் பகுதி மக்களுக்கும்,சிறிலங்காப் படையினருக்கும் முறுகல் நிலை ஏற்பட்ட நிலையில் தற்போதைய படுகொலைச் சம்பவத்தால் மக்கள் கொந்தளிப்பான நிலையில் உள்ளனர். (27,33)

### மூன்றாவது...

அறிவித்தலையும் அது சார்ந்த ஆவணங்களையும் அவரிடம் கேட்பதற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இரண்டாவது தடவையாக சனாதிபதியாக தெரிவாகி 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் செய்து கொண்ட பதவிப் பிரமாணம் சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தலும், 2000ஆம் ஆண்டில் சனாதிபதியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பு யோசனைகள் தவிர மூன்றாவது தடவையாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டமை சம்பந்தமாக எந்தவிதமான சட்டரீதியான ஆவணமும் இன்மையினாலேயே இந்த வர்த்தமானி அறிவித்தலைக் கேட்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவது தடவையாகவும் தான் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதாக சனாதிபதி கூறுவாரேயானால் அது சம்பந்தமான சட்டரீதியான ஆவணங்களை முன்வைக்குமாறு தேர்தல் ஆணையாளர் கேட்கவுள்ளார்.

எவ்வாறாயினும், அரசியலமைப்புச் சட்டத்திற்கமைய சனாதிபதி பதவியை ஏற்று இரண்டு தடவை ஆட்சிக்கு வந்த பின்னர் பதவியின் நிறைவுக் காலத்தில் சனாதிபதித் தேர்தலை அறிவிக்கும் சட்ட அதிகாரம் தேர்தல் ஆணையாளரிடமே உள்ளது. இதற்கமைய அடுத்த சனாதிபதித் தேர்தலை எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இரு வாரங்களுக்கு முன்னர் சனாதிபதிக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் இடையே சந்திப்பு நடைபெற்றதாகவும், இதன்போது அடுத்த சனாதிபதித் தேர்தல் தொடர்பாக உரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த தேர்தல் எப்போது என அறிவிக்கும் அதிகாரம் தன்னிடமே இருப்பதாக இந்தச் சந்திப்பின்போது தேர்தல் ஆணையாளர் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

## கொழும்பில் ஒரு குண்டு வெடித்தாலும் சிறீலங்காவின் பொருளாதாரம் சீர்குலையும்!

-அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க எச்சரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா தலைநகர் கொழும்பில் ஒரு குண்டு வெடித்தாலும் சிறிலங்காவின் ஒட்டுமொத்த பொருளாதாரமுமே சீர்குலைந்துவிடும் என்று அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் அனுரா பண்டாரநாயக்க கூறியதாவது,

சனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரை பயணத்தை மேற்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு உரிமை இருக்கின்றது. ஆனால் சனாதிபதித் தேர்தலுக்கு ஓராண்டுக்கும் மேல் இருக்கும் நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அது குறித்து அவசரப்படவில்லை.

ஐ.தே.க வின் பரப்புரை நிகழ்ச்சிகள் குறித்து நாம் கவலைப்படவில்லை. சனாதிபதித் தேர்தல் குறித்து அவசரப்படவேண்டாம் என்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எங்களிடம் கூறியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கூட்டப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் சனாதிபதி வேட்பாளர் குறித்து எந்த ஒரு முடிவும் மேற்கொள்வில்லை. ஊடகங்கள் தான் அப்படி எழுதுகின்றன.

அரசை கடுமையாகச் சாடி வருகின்ற அத்துரலிய ரத்னதேரரும், ஓமல்பே சோபிததேரரும் போர்க் காலத்தில் ஒரு துளி கூடப் பங்காற்றவில்லை. கொழும்பில் இனி ஒரு குண்டு வெடித்தால் கூட சிறிலங்காவின் ஒட்டுமொத்த பொருளாதாரமுமே சீர்குலைந்துவிடும்.

இந்த பௌத்த பிக்குகள் போர் முனைக்குச் செல்லத் தயாராக இருக்கிறார்களா? வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களிடம் நாம் அனுதாபம் கொள்ளவில்லையெனில் நம்மை உண்மையாக சிங்கள பௌத்தர்கள் என்று எப்படி அழைத்துக்கொள்வது?

அரசு கவிழ்ந்து விடும் சூழலிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இழப்பு ஏற்படும் சூழலிலும் கூட மிகத் துணிவாக பொதுக்கட்டமைப்பை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்படுத்தியுள்ளார். பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி நடத்தும் வீதி ஆர்ப்பாட்டங்களை நாம் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்றார் அவர்.

### கடற்றொழிலாளர்....

கோரிக்கைகளை இப்வெதிர்ப்புப் போராட்டத்தின் அடிப்படை கோரிக்கைகளாக அவ்வமைப்புக்கள் முன் வைத்துள்ள அதேவேளை, அன்றைய தினம் தமது தொழில் நடவடிக்கைகளைப் பகிஷ்கரிக்கப்போவதாகவும் அவ்வமைப்புக்கள் அறிவித்துள்ளன.

இதனிடையே நேற்றுக் காலை படையினரின் முட்கம்பி வேலியில் சிக்கி மீனவரொருவர் உயிரிழந்தமை தொடர்பாக அப்பகுதி கடற்றொழில் அமைப்புக்களது பிரதிநிதிகள் கடற்படையினருடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளனர். நேற்று நண்பகல் குருநகர் இறங்குதுறைப் பகுதியிலுள்ள கடற்படைத் தளத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

தொழிலுக்குச் சென்று கரை திரும்பும் மீனவர்களது பாதையில் முட்கம்பி வேலி போடப்பட்டமை மற்றும் அதில் மின்சாரம் பாய்ச்சப்பட்டமைக்கும், இதனால், அப்பாவி மீனவரொருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவத்திற்கும், இச்சந்திப்பில் கலந்து கொண்ட கடற்றொழில் சங்க பிரதிநிதிகள் வன்மையாக கண்டனம் தெரிவித்துள்ளனர். அத்துடன் உயிரிழந்தவரது குடும்பத்திற்கான உரிய நஷ்டஈட்டை அரசு வழங்க வேண்டுமெனவும் அவர்கள் கடற்படை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.(27,33)

மெகா
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான
புலமைப்பரிசில் பரீட்சை
10-07-2005 ஞாயிறு
இலவச அனுமதிகளுக்கு
ASIAN COMPUTERS
• யாழ்ப்பாணம் • சுன்னாகம்
• சாவகச்சேரி • நெல்லியடி • கிளிநொச்சி

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.